விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 027 வள்ளுவர் ஆண்டு 2053 தை 02 சனிக்கிழமை (15.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829









**24 மணி நேரமும் மின்சாரம் தடைப்படலாம்**
03

**எந்த நேரத்திலும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்**
03



**இரு மாதங்களில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு?**
03

**கண்டிய நடனத்துடன் யாழில் பொங்கல்**



(03ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நியமங்களுக்கு அமைய
# மனித உரிமைகள் மேம்படுத்தப்படும்
## வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ்



(கொழும்பு)

**சர்வதேச நியமங்களுக்கு அமைய இலங்கையில் மனித உரிமைகள் மேம்படுத்தப்படும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

ஹங்கேரிய வெளியுறவு அமைச்சருடன் நடைபெற்ற சந்திப்பின்போது ஜி.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 15

## கொரோனா 16 பேர் பலி

(கொழும்பு)

கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் 15

## கொடிகாமத்தில்
## மயங்கிவிழுந்த சிறுவன் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் - மந்துவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை தைப்பொங்கல் தினத்தில் வீட்டில் மயங்கி விழுந்த நிலையில் 15

## தேவையற்ற பயணங்களை தவிருங்கள் இணையம் மூலம் தேவையை நிறைவேற்றுங்கள்
### எரிபொருள் நெருக்கடிக்கு அமைச்சர் தினேஷ் அறிவுரை

(கொழும்பு)

தற்போது நாடு எரிபொருள் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில், தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொதுமக்கள் எரிபொருள் பாவனையை குறைத்துக்கொள்ள வேண்டும் எனவும், எரிபொருள் நெருக்கடி மற்றும் டொலர் நெருக்கடியை இதன்மூலம் தீர்க்க முடியும்எனவும்அமைச்சர் தெரிவித்தார். 15

## ராஜபக்சவின் ஆட்சி ஏற்கனவே கவுண்டுள்ளது
### சுமந்திரன் எம்.பி

(கரணவாய்)

இந்த ஆட்சி ஏற்கனவே கவுண்டுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம். ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை தனது வடமராட்சி தொகுதி அலுவலகத்தில் இடம்பெற்ற தைப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டபின் 15

### 20 அத்தியாவசிய பொருட்களுடன்
## 3998 ரூபாவுக்கு சதொசவில் நிவாரணப் பொதி - பந்துல

(கொழும்பு)

10 கிலோ சம்பா அரிசி உள்ளிட்ட 20 அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதி ஒன்றை 3,998 ரூபாவுக்கு சதொச நிறுவனங்கள் ஊடாக பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். 15

## பண்பாடுகள், கலைகள் மூலமே எமது இருப்பை நிலைநிறுத்தலாம்
### சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



(கிளிநொச்சி)

பண்பாடுகள், கலைகளின் வெளிப்பாடுகள் மூலமே நமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்ள முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் 15

### தனியார் பேருந்து உரிமையாளர்
## சங்கானை குளத்தில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தனியார் பேருந்து உரிமையாளர் ஒருவர் மூன்று நாட்களாகக் காணாமற் போன நிலையில் சங்கானை மண்டிகைக் 15

### மீசாலையில்
## மலேரியா நோயாளர் அடையாளம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணி 15

## உழவு இயந்திரத்தில் நசியுண்ட குடும்பஸ்தர் பலி
### புத்தூரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இரு சக்கர உழவு இயந்திரத்தில் உழுது கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் உழவு இயந்திரம் புரண்டதில் சில்லுக்குள் நசியுண்டு உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் தோட்ட நிலத்தை உழும் போது இடம் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுதந்திரக் கட்சி வெளியேறினாலேயே புதிய அரசாங்கத்தை அமைக்கலாம்

## மைத்திரிக்கு மனோ எம்.பி ஆலோசனை

(கொழும்பு)

புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமெனின், தற்போதைய ஆளும் அரசாங்கத்தில் இருந்து முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டுமென, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து கொண்டு புதிய அரசாங்கத்தை அமைக்கப்போவதாக கருத்து வெளியிடுவதில் எவ்வித பலனும் இல்லை எனவும், முதலில் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுமாறு மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை முன்வைப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் மனோ கணேசன் தலைமையில் நேற்று தைப் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே மனோ கணேசன் இதனைத் தெரிவித்தார். (ம)

# மட்டக்களப்பில் கடலில் நீராடிய இரு சிறுவர்கள் மாயம்

## தேடும் பணி தீவிரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கல்குடா, கும்புறுமூலை கஜவத்தை கடலில் நேற்று நீராடிய ஏழு சிறுவர்களில் இருவர் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - கிரான் பகுதியைச் சேர்ந்த ஏழு சிறுவர்கள் குறித்த கடலில் நீராடிக் கொண்டிருந்தபோதே இருவர் கடலில் மூழ்கியுள்ளனர்.

இதில், கிரான் பிரதான வீதியைச் சேர்ந்த ஜீவானந்தா சுஜினன் (வயது 16), ச.அஸ்வன் (வயது 16) ஆகிய இரு சிறுவர்களும் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

கடலில் நீராடிய மற்றுமொரு சிறுவன் காப்பாற்றப்பட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடலில் காணாம்ல்போன சிறுவர்களை தேடும் பணிகள் இடம்பெற்று வருவதுடன், இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# சுதந்திரக் கட்சிக்குள் முரண்பாடுகள் இல்லை

## அமைச்சர் மகிந்த அமரவீர

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்ளக முரண்பாடுகள் எதுவும் இல்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவித்தபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

சில கட்சிகள் கிராமங்களுக்குச் செல்லமுடியாத நிலை காணப்படுவதாகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அவ்வாறான கவலைகள் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் மத்திய குழு மற்றும் அமைப்பாளர்களின் உந்துதலுடனும் ஆதரவுடனும் இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர், கட்சிக்குள் பிளவுகள் எதுவும் இல்லை என்றும் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், கொரோனா 19 பரவுவதற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து கட்சிச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள முடியாது எனவும், எனவே கட்சி பிரதிநிதிகள் கிராமங்களுக்கு சென்று கூட்டங்களை ஏற்பாடு செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முயற்சிகளால் எந்தவொரு தனிநபரும் கவலையடைய வேண்டாம் என்று கூறிய அமைச்சர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பில் பலர் பலவிதமான கூற்றுக்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை அவதானித்துள்ளதாகவும் தெரிவித்தார். (ம)

# +677 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்றைய தினம் மேலும் 677 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் அடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள கோவிட் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 594,996 ஆக அதிகரித்துள்ளது. (ம)


## வீடு, காணி விற்பனைக்கு

இரு 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு. ஒரு 4 பரப்பு காணியில் 6 அறைகளுடன் கூடிய ஓரளவு பழைய வீடும் உள்ளது. நான்கு, நான்கு பரப்புகளாகவோ அல்லது 8 பரப்பாகவோ வாங்க முடியும்.

இடம் : ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் பலாலி வீதியில் இருந்து 200m தொலைவில் கணேசா பாடசாலையின் பின்புறம்.

(தரகர் தேவையில்லை) (9665)

077 738 4178 | 077 147 1000

## கிழவன்காடு கலாமன்றம்

காரைநகர் யாழ்.கிளை

### தைப்பூச நாள் வகுப்பு

எமது கலாமன்றக் கிளைகளில் எதிர்வரும் 18.01.2022 செவ்வாய்க்கிழமை தைப்பூச நன்னாளில் கலை வகுப்புகளுக்கான நாள் வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. இதில் புதிதாக இணைய விரும்புபவர்கள் இணைந்து கொள்ள முடியும்.

**நடைபெறும் கலை வகுப்புகள்**

- அறநெறி
- பண்ணிசை
- சங்கீதம்
- நடனம்
- மிருதங்கம்
- வயலின்
- வீணை
- ஓகன்
- சித்திரம்

(C-3542)

பலரது வேண்டுகோளுக்கு அமைய பனை ஓலையினால் செய்யப்படும் பொருட்களுக்கான (பன்னவேலை) குறுகியகால இலவச பயிற்சியும் அன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளதால் அதில் பால், வயது வேறுபாடின்றி இணைந்து கொள்ள முடியும்.

**காலம் : 18.01.2022 செவ்வாய்க்கிழமை பி.ப 5.00 மணி**

பதிவாளர் காரைநகர் கிளை 077 015 6244

பதிவாளர் யாழ். கிளை இல. 428, K.K.S வீதி, யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் கோவில் அருகாமை) 077 578 6638

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532



## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 27.01.2021 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைமகன்

### அமரர் சின்னத்துரை துரைராஜா

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் ஊரிக்காடு இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நெற்கொழு வீதி,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்
076 469 8643

(C-3545)



## மணிவிழா வாழ்த்துக்கள்



திரு. தம்பிராசா அம்பலவாணர்
[SLPS - I]
[யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி]

கல்விப் புலத்தில்
ஆசிரியர் பணி - 1993.01.11 - 1997.05.11
அதிபர் பணி - 1997.05.12 - 2022.01.14

யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் அதிபராகப் பணிபுரிந்து 15.01.2022 இன்று மணிவிழாக் காணும் அதிபருக்கு எமது வாழ்த்துக்கள்!

(C-3543)

தென்மராட்சி அதிபர் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச இந்து பௌத்த ஒற்றுமைக்கான அமைப்பு மற்றும் யாழ்.நண்பர்கள் அமைப்பும் இணைந்து நடத்திய பொங்கல் விழா நேற்று யாழ்ப்பாணத்தில் நல்லை ஆதீன மண்டபத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு கலாசாரங்களை பிரதிபலிக்கும் வகையில் கண்டிய நடனம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், நாதஸ்வர மேள தாளங்கள் என்பன இடம்பெற்றன.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், நாகவிகாரை விகாராதிபதி ஸ்ரீவிமல தேரர், மறவன்புலவு சச்சிதானந்தன், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் மதத்தலைவர்கள், இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்- சிவசாந்தன்)

## ஜயசுந்தர இராஜினாமா



(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளர் பதவியில் இருந்து கலாநிதி பி.பீ.ஜயசுந்தர நேற்று இராஜினாமா செய்தார்.

இதன்போது, அவர் தனது அலுவலக அதிகாரிகளிடம் இருந்து விடைபெற்றுக்கொண்டார்.

பி.பீ.ஜயசுந்தர பல வருடங்களாக அரசாங்கத்தின் உயர் பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 1000 நாட்கள் பூர்த்தி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று நேற்றுடன் ஆயிரம் நாட்கள் பூர்த்தியாகின.

இதனை முன்னிட்டு விசேட ஆராதனைகள் இடம்பெற்றன. (நி-5)

## அடுத்த இரண்டு மாதங்களில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு?

(கொழும்பு)

அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக நாட்டில் அடுத்த இரண்டு மாதங்களில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என மருந்து உற்பத்தி வழங்கல் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஆர். எம்.சமன் குசும்சிறி தெரிவித்தார்.

தற்போது மருந்துகளுக்கு தட்டுப்பாடு இல்லை என்றாலும், அந்நிய செலாவணி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு தட்டுப்பாடு ஏற்படலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

## 24 மணித்தியாலமும் மின்சாரம் தடைப்படலாம் கைவிரித்தது மின்சார சபை

(கொழும்பு)

கடந்த காலங்களில் கொரோனாத் தொற்று பரவலினால் நாடு மூடப்பட்டதைப் போன்று மின்சாரம் இல்லாத காரணத்திற்காக நாடு மூடப்படும் என மின்சார சபையின் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

எரிவாயு, பால்மா வரிசை போன்று மின்சார தடைக்கும் ஏதாவது ஒரு வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை எதிர்வரும் நாட்களில் ஏற்படும்.

நாட்டில் இந்த நாட்களிலும் ஏற்படும் மின் தடை தொடர்பில் அதிகாரிகள் தெரிவித்துவரும் கருத்துக்கள் முரண்பாடானவை என செயலாளர் ரஞ்சன் ஜயலால் மேலும் தெரிவித்தார். (நி-5)

## எவ்வேளையிலும் எரிபொருளுக்கான தட்டுப்பாடு ஏற்படலாம்

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

எவ்வேளையிலும் எரிபொருளுக்கான தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அபாயம் இருக்கின்றது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய எரிபொருள் நிலைமை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், எரிபொருள் விநியோகத்தை விடவும் எரிபொருளுக்கான பணத்தை செலுத்துவதிலேயே பிரச்சினை உள்ளது.

வரும் எரிபொருள் கப்பல்கள் 7, 8 நாட்களாக எரிபொருளை இறக்க முடியாத நிலைமையில் இருக்கின்றன. வங்கிக் கடன் பத்திரங்கள் இன்றி எரிபொருள் கப்பல்களை கொண்டு வந்தாலும் அவற்றுக்கு தேவையான டொலர்களை சேர்த்துக் கொள்ளும்வரை குறித்த எரிபொருள் அடங்கிய கப்பல்களை துறைமுகத்தில் நிறுத்தி வைக்க வேண்டி நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அத்துடன் டொலர் பிரச்சினையைக் கட்டுப்படுத்திக் கொள்ள நாங்கள் சீனரிடம் 300 மில்லியன் டொலர்களையும் இந்தியாவிடம் 400 மில்லியன் டொலரை பெற்றோம்.

பங்களாதேஷிடம் [illegible] மில்லியன் டொலர்களையும் கடனாகப் பெற்றோம். ஆனால் அவை அனைத்தும் ஒரு மாதத்திற்கு எரிபொருளை கொண்டு வர போதுமானது அல்ல. ஒரு மாதத்துக்கு எரிபொருள் கொண்டுவர 400 மில்லியன் டொலர் தேவைப்படுகின்றது.

இந்நிலையில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நெருக்கடி நிலைமையில் எரிபொருள் தொடர்பில் நான் இதற்கு முன்னர் உறுதிமொழி வழங்கியது போல் தற்போது என்னால் வழங்க முடியாது. அதனால் ஜனவரியில் எவ்வேளையும் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படக்கூடிய அபாயம் இருக்கின்றது என அவர் தெரிவித்தார். (நி)

## 500 கொள்கலன் அரிசி தனியாரால் இறக்குமதி

### வர்த்தக அமைச்சர் பந்துல




(கொழும்பு)

தனியார் தரப்பினரால் இறக்குமதி செய்யப்பட்ட 500 அரிசி கொள்கலன்கள் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வரி நிவாரணத்திற்கு அமைய இறக்குமதி செய்யப்பட்டுள்ள இந்த அரிசி தொகையைச் சந்தைக்கு விநியோகித்த பின்னர் அரிசியின் விலை குறைவடையும் எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆவது ஒரு நாள் போட்டி அயர்லாந்து வெற்றி



அயர்லாந்து அணி மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது.

முதல் போட்டியில் மேற்கிந்தியதீவுகள் வெற்றி பெற்றது. 11 ஆம் திகதி நடைபெற இருந்த இரண்டாவது போட்டி கொரோனா பரவலால் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற அயர்லாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய மேற்கிந்திய தீவுகள் 48 ஓவரில் 229 ரன்களுக்கு ஒல் அவுட்டானது.

147 ரன்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்து திணறிய நிலையில், இறுதிக்கட்ட வீரர்கள் ரோமாரியோ ஷெப்பர்டு, ஒடியன் ஸ்மித் பொறுப்புடன் ஆடியதால் அணி 200 ரன்களைக் கடந்தது.

அந்த அணியில் ரோமாரியோ ஷெப்பர்டு 50 ரன்னும் ஒடியன் ஸ்மித் 46 ரன்னும், புரூக்ஸ் 43 ரன்னும் எடுத்தனர்.

அயர்லாந்து சார்பில் ஆண்டி மெக்பிரின் 4 விக்கெட், கிரெய்க் யங் 3 விக்கெட்டும், ஜோஷ்வா லிட்டில் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 230 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அயர்லாந்து களமிறங்கியது. 32 ஆவது ஓவரில் 4 விக்கெட்டுக்கு 157 ரன்கள் எடுத்திருந்த நிலையில் மழை குறுக்கிட்டது.

இதனால் டி.ஆர்.எஸ். முறைப்படி, 36 ஓவரில் 168 ரன்கள் எடுத்தால் வெற்றி என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இறுதியில், அயர்லாந்து 32.3 ஓவரில் 168 ரன்களை எடுத்து அபார வெற்றி பெற்றது. அந்த அணியின் ஹாரி டெக்டார் அரை சதமடித்து 54 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் இரு அணிகளும் 1-1 என சமனிலையில் உள்ளன.

இரு அணிகளுக்கு இடையிலான 3 ஆவது ஒருநாள் போட்டி நாளை நடைபெற உள்ளது. (4)

# நோவக் ஜோகோவிச்சின் விசா மீண்டும் ரத்து



உலகின் நம்பர் 1 டென்னிஸ் வீரரான நோவக் ஜோகோவிச்சின் விசாவை மீண்டும் ரத்து செய்துள்ளது அவுஸ்திரேலியா.

அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டிகள் நாளை மறுதினம் 17 ஆம் திகதி தொடங்குகிறது.

இதில் பங்குபெறும் வீரர் மற்றும் வீராங்கனைகள் இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நோவக் ஜோகோவிச் தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத நிலையில், அவுஸ்திரேலியா வந்தார்.

அவர் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாததற்கான போதிய மருத்துவ ஆவணங்களை சமர்ப்பிக்க தவறியதால், விசா ரத்து செய்யப்பட்டதாக அவுஸ்திரேலியா அறிவித்தது.

இதனை எதிர்த்து ஜோகோவிச் அங்கேயே தங்கி, நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். இந்த வழக்கில் ஜோகோவிச் வெற்றி பெற்று விளையாட அனுமதி கிடைத்த போதும் 2 ஆவது முறையாக அவருக்கான விசாவை அவுஸ்திரேலிய அரசு ரத்து செய்துள்ளது.

அதாவது, ஜோகோவிச் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாததால், மக்கள் நலன் கருதி விசா ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2488

டிலானி




விதுஜா




கவின்




ஜீவிதன்




விநோத்




துலக்ஷன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்கள் மோதி விபத்து 12 பேர் மருத்துவமனையில்

(குருமன்காடு)

வவுனியா ஏ-9 வீதி பூனாவை பகுதியில் அதிசொகுசு பேருந்து உட்பட மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 12 பயணிகள் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், பூனாவை பகுதியில் வீதியின் அருகே விபத்துக்குள்ளான டிப்பர் வாகனம் ஒன்று நின்றுள்ளது. இதன் போது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பேருந்து ஒன்று டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானதுடன், குறித்த விபத்துக்குள்ளான பேருந்துடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பிறிதொரு அதிசொகுசு பேருந்து மோதி விபத்துக்குள்ளானது. இவ் விபத்தில் பேருந்தில் பயணித்த 12 பயணிகள் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து காரணமாக ஏ-9 வீதியூடான போக்குவரத்து சுமார் 1 மணிநேரம் வரை ஸ்தம்பித்தது. இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-250)


# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(கிளிநொச்சி)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில் நாளை 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி கண்டாவளை மானடித்தகுளம் தேக்கடிப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருக்கள் சாமஸ்ரீ தேசமாணி சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்காந்தராசக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (5)

# கட்டுப்பாட்டை இழந்த கூலர் வாகனம் விற்பனை நிலையத்துடன் மோதி விபத்து



(மன்னார்)

மன்னார் பொது மருத்துவமனை பிரதான வீதி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் விபத்து சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மன்னார் பேசாலை பகுதியில் இருந்து மீன்களைச் ஏற்றி சென்ற கூலர் ரக வாகனம் ஒன்று ஸ்ரேடியம் வீதி ஊடாக மருத்துவமனை சந்தி நோக்கி பயணித்த குறித்த வாகனம் மருத்துவமனை சுற்று வட்ட பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள கடைகளில் மோதி விபத்தை ஏற்படுத்தியது. இவ் விபத்தில் விற்பனை நிலையப் பகுதி சேதமடைந்துள்ளது. குறித்த விபத்தில் சாரதி மற்றும் நடத்துநர் பலத்த காயங்களுடன் கிராம இளைஞர்களால் மீட்கப்பட்டு மன்னார் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பான மேலதிக் விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-285)



வவுனியா கற்குளம் பகுதியில் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றிற்கு வவுனியாவைச் சேர்ந்த வர்த்தகர் மயூரனின் நிதியில் இராணுவத்தின் ஒத் துழைப்புடன் வீடு ஒன்று அமைக்கப்பட்டு நேற்று பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டது. (படம்: சதீஸ்)


# 31ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 21.12.2021 (செவ்வாய்க்கிழமை) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர். பிள்ளையாகுட்டி குருகுலசிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 16.01.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக் கிரியைகள் 20.01.2022 வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-3539)

335/27 மன்னார் வீதி,
வேப்பங்குளம், வவுனியா.
077 758 4402, 077 853 2445

மனைவி: மலர் குருகுலசிங்கம்
மகள் : சுமதி ரவிச்சந்திரன்


# இராசிபலன்

15.01.2022
தை 02, சனிக்கிழமை
திரியோதசி பின்னிரவு 2.06 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 12.39 மணிவரை
சுபநேரம் 3.34-5.04 மணிவரை
இராகுகாலம் 9.34-11.04 மணிவரை
சந்திராஷ்டமம்: விசாகம், அனுசம்
சனிப்பிரதோச விரதம்,
மாட்டுப்பொங்கல் வளவன்

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சவால்களை சாமர்த்தியமாகக் சமாளிப்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பகையொன்று நட்பாகலாம்.

**ரிஷபம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தொலை பேசி வழியில் சுப செய் திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிகும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வழியில் விரயங்கள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்புண்டு, தொழில் வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் ரீதியாக சிலர் உங்களை உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** பொறுமையால் பெருமை காணும் நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**தனுசு** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுணடு.

**கும்பம்** பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்; தாழ்ந்த சுபாவமுண்டு.

**மீனம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய திட்டங்களை தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சித் தரும்.

இதுவரை முழு நிம்மதியோடு வாழ்ந்தவர்கள் யாருமிலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிகாமத்தில் வீடொன்றில் வன்முறைக்கும்பல் அட்டகாசம்



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லாரைக் கிராமத்தில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு வன்முறைக் கும்பல் ஒன்று வாள்வெட்டு தாக்குதல் நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது வீட்டு வேலித் தகரங்கள், மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட உடைமைகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)



தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ். பாதுகாப்புபடைத்தலைமையக இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படும் பலாலி பண்ணைக்குள் பணிக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட 108 இராணுவ சிப்பாய்களுக்கான இலவச உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (படம்- கஜிந்தன்)

## அரங்க கதையாடல்

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணைய வழி பன்னாட்டு அரங்க கதையாடல் நிகழ்வு 16,17,18,19,20 ஆகிய திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவோர் சூம் செயலி இலக்கம் 647 334 8261 கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ள முடியும். (5)

## கலாபூஷண விருதுக்கு யாழ்.இக்பால் தெரிவு



(யாழ்ப்பாணம்)

எழுத்துத்துறைக்காக 2021 கலாபூஷண விருதுக்கு யாழ். இக்பால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (4-5)

# மரக்கடத்தல் முறியடிப்பு சாரதி கைது



(யாழுப்பாணம்)

தீவுப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக பனை மரங்கள் மற்றும் பெறுமதியான மரங்கள் என்பவற்றை பாரவூர்தியில் கடத்திச் சென்ற சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மரக்கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட பாரவூர்தியையும் மரங்களையும் கைப்பற்றப்பட்டதுடன் பொலிஸார் பாரவூர்தி சாரதியிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

புங்குடுதீவு மடத்துவெளிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றது.

ஜே/26 கிராம உத்தியோகத்தர் மற்றும் அப்பகுதியின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரது உறுதிப்படுத்தலில் 45 சீவிய பனை மரத் துண்டுகளை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் அதிகளவான மரங்களை பாரவூர்தியில் எடுத்துச் செல்ல முற்பட்டவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த மரக்கடத்தல் தொடர்பாக முன்னராக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிவித்த போதிலும் அவர்கள் நடவடிக்கை எடுக்காத நிலையில் பொலிஸ் உயர் அதிகாரியிடம் முறையிட்ட பின்னரே ஊர்காவற்றுறை பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (5-33)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 2
கி.பா: சூரி 1 செவ் 10 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L வியாபாரம் (சொந்தம்)
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/6468

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: சூரி 7 செவ் 6 இல் உயரம்:5'6"
தகைமை/தொழில்: A/L வியாபாரம்
தொ.இ: B/6472

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா:- செவ் 11 சூரி 12 இல்
உயரம்: 154 cm
தகைமை/தொழில்: AL தனியாார் தொழில் (சாரதி)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/6524

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: சூரி 4 செவ் 3 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: OL பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: பிரான்ஸ் மட்டும்
தொ.இ: B/6596

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா: 2 சூரி 3 செவ் 5 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA பட்டதாரி DS Office
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் அல்லது வியாபாரம்
தொ.இ:G/6212


பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: 23 ¼ சூரி 10 செவ் 9 இல்
உயரம்: 150 cm
தகைமை/தொழில்: A/L சைவ போசனம்
எதிர்பார்ப்பு: சைவ போசனம் அசைவமும் ஏற்றுக்கொள்ளப்படும் வெளிநாடு மட்டும்
தொ.இ:G/6214

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா: 59 சூரி . செவ் 10 உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, MSc
எதிர்பார்ப்பு: சக தகைமை. அரச, தனியார் தொழில்
தொ.இ: G/6238

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
கி.பா: 13 ¾ சூரி 4 செவ் 2
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MBA, ACMA, BSc/ தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: பொறியியலாளர். கணக்காளர். வங்கியாளர்
தொ.இ:G/6324

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்[illegible]
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# பட்டிப்பொங்கல் விழா



(குப்பிழான்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற பட்டிப் பொங்கல் விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் யாழ்.நகரில் அமைந்துள்ள சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் இடம் பெறும். பசுக்களைப் பாதுகாக்கும் இணையத்தின் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் கோபவனி சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் ஆரம்பமாகி மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்.பேருந்து நிலைய மேற்கு வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக மேற்படி ஆலய த்தை வந்தடையும். (4-5-18)

# நகர சபையின் அனுமதியின்றி தொலைத் தொடர்பு கோபுரங்கள் அமைப்பு

(குப்பிழான்)

சாவகச்சேரி நகர சபைக்கு உட்பட்ட மீசாலை மற்றும் கிராம்புவில் பகுதிகளில் நகர சபை அனுமதியின்றி தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்தின் ஸ்மாட் லாம்போல் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டு தொலைத்தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

தொலைத் தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு அதில் தொலைத் தொடர்புக் கருவிகள் (அன்ரனாக்கள்) பொருத்தப்பட்டுள்ளமை தென்மராட்சி மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி. சிவமங்கை இராமநாதனிடம் கேட்ட போது, குறித்த கோபுரங்கள் நிர்மாணிக்கப்படுவதாகப் பொதுமக்களினால் நகர சபைக்கு முன் வைக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து எமது அதிகாரிகள் சென்று குறித்த கோபுர நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு கடந்த பத்து நாட்களுக்கு முன் அறிவித்தல் வழங்கியிருந்தனர். இந்நிலையில் மேற்படி கோபுரங்கள் நகர சபையின் எந்தவிதமான அனுமதிகளும் பெறாமல் நிர்மாணிக்கப்பட்டுச் சட்டவிரோதமாகத் தொலைத்தொடர்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (4-5-18)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சி வெளியேறினால் அரசு கவிழ்வது உறுதி

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டு அரசில் பிரதான வகிபாகத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வகிக்கிறது. இந்த அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறினால் அரசு கவிழ்வது உறுதி என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

அரசின் கொள்கைகள் பிடிக்கவில்லையெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கௌரவமான முறையில் வெளியேற வேண்டும் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இருந்துகொண்டு எமக்குச் சவால் விடும் சிறியவர்களும் பெரியவர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்துதான் அரசியலை ஆரம்பித்தார்கள்.

சுதந்திரக் கட்சிதான் அவர்களின் அரசியல் வாழ்வுக்கு முகவரி கொடுத்தது. இதை மறந்து அவர்கள் செயற்படுகின்றார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டணி வெற்றியடைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே பிரதான காரணம்.

இந்நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசில் பிரதான வகிபாகத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வகிக்கின்றது. அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறினால் அரசு கவிழ்வது உறுதி. இதை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமை புரிந்துகொள்ளும்.

அரசைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல. எனினும், அரசு தவறான பாதையில் தொடர்ந்து பயணித்தால் பிரதான பங்காளிக் கட்சியான நாம் அதிலிருந்து வெளியேறவும் தயங்கமாட்டோம்" என மைத்திரி தெரிவித்தார். (நி)

IBC தமிழ் அனுசரணையில்

யாழ்ப்பாண மாநகர சபை முதல் முறையாக முன்னெடுக்கும்

முத்தமிழ் விழா

தை திங்கள் 16 காலை 8.30 மணி முதல்
நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில்

விருது வழங்கல் இயல், இசை, நாடக அரங்குகளில்..

இயல், இசை, நாடகத் துறைகளில் பெரும் பங்காற்றியவர்களுக்கான 'அரசகேசரி' விருது


கவிஞர்.சோ.பத்மநாதன்
இயல் துறைக்கான அரசகேசரி விருது


'இசைவாணர்'
முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன்
(கண்ணன்)
இசைத்துறைக்கான அரசகேசரி விருது


"அண்ணாவியர்"
வைத்தியாம்பிள்ளை யேக்கப் அல்பிரட்
நாடகத்துறைக்கான அரசகேசரி விருது

இயல் அரங்கு காலை 8.30 முதல் 1 மணிவரை



கம்பவாரிதி ஜெயராஜ் குழுவினரின்
நீதி ஆயம் (வழக்காடு மன்றம்)
"இன்றைய உலக நடைக்கு பொருந்தாத
அறங்களை வகுத்துத்தந்த வள்ளுவர் குற்றவாளி"

இசை அரங்கு மாலை 3.30 முதல் 7.00 மணிவரை



நாத சங்கமம்
"ஈழநல்லூர் நாதஸ்வர கானவினோதன்"
P.S. பாலமுருகன்
"நாதஸ்வர இளவரசன்"
K.P. குமரன் பஞ்சமூர்த்தி குழுவினர்

இசை ஆராதனை



ஈழத்தின் புகழ்பூத்த
மூத்த இளைய இசைக்கலைஞர்கள்
இணைந்து வழங்கும் இசைச் சங்கமம்

நாடக அரங்கு மாலை 7.00 முதல் 10.00 மணிவரை

யாழ்ப்பாண நாட்டார் வழக்கியல் கழகம் பெருமையுடன் வழங்கும்
சத்தியவான் சாவித்திரி - இசை நாடகம் -

பாசையூர் புனித அந்தோனியார் கலைக்கழகம் பெருமையுடன் வழங்கும்
கலாபூசணம் பி.யூல்ஸ்கொலின் நெறியாள்கையில்
வீரபாண்டிய கட்டப்பொம்மன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யாழ்.மாநகர சபை

விழா இணை அனுசரணை ReeCha

(C-3537)

# மீண்டும் கொரோனா அலை ஏற்படும் அபாய நிலை

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் கொரோனா அலை ஏற்படும் அபாய நிலை உள்ளதாக தேசிய தொற்று நோய் விஞ்ஞான நிறுவகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த இரு வாரங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பல பகுதிகளில் ஒமிக்ரோன் திரிபுடனான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஒமிக்ரோன் திரிபானது மிக இலகுவாக பரவக்கூடியது.

அறிகுறிகள் குறைந்துள்ள போதிலும், பெரும்பாலானோருக்கு அந்த திரிபு தொற்றக்கூடும் எனவும் அந்த நிறுவகம் தெரிவித்தது. (நி)

# தேங்காய் எண்ணெயின் விலை உயரும் அபாயம்

(கொழும்பு)

தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெயின் விலை உயரும் அபாயம் உள்ளதாக நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் தலைவரான ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் இது குறித்து பதிவிட்டுள்ளார்.

வருடாந்த தேங்காய் அறுவடையுடன் ஒப்பிடுகையில் நாட்டின் மொத்த தேங்காய் பற்றாக்குறை 1.9 பில்லியன் ஆகும்.

எனவே, அரசாங்கம் இந்த 1.9 பில்லியன் தேங்காய் தட்டுப்பாட்டைச் சரியான முறையில் நிர்வகிக்க வேண்டும்.

இல்லாதுவிட்டால், உள்ளூர் தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் மேலும் உயரும் அபாயம் இருப்பதாக பதிவிட்டுள்ளார். (நி-5)

# திருமண வீட்டில் நடனமாடியவர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

(கொழும்பு)

பாணந்துறை - கொரகான பகுதியில் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் நடனமாடிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

வாதுவ - பொதுபிடி பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நிஷான் லக்ஷான் ஜயரத்ன என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/வீரசிங்கம் மத்திய கல்லூ

# உயர்திரு. த.அம்பலவாணர் அவர்களி



## ஆசிச் செய்தி

அறுபதாவது அகவையை அடைந்து மணிவிழா நாயகனாக நிற்கின்ற திருவாளர் அம்பலவாணர் அவர்கள் வீரசிங்கம் மத்திய கல்லூரியின் முதல்வராக சிறப்புற தனது அரும்பணியை ஆற்றியுள்ளார். பல்வேறு பாடசாலைகளில் கற்பித்தல் பணியையும், அதிபராக அரும்பணி புரிந்த நிலையையும் அனைவரும் அறிவர்.

அந்த வகையில் வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு முதலாம் தர அதிபர் ஒருவராக நியமனம் பெற்றது மிக மிகப் பொருத்தமானது ஒன்றே. பாரிய பொறுப்புகளை ஏற்று நேரிய நிலை நின்று தனது சீரிய பணியை செவ்வனவே செய்த குணக்குன்று ஒன்றாக அதிபர் அவர்கள் நின்றுள்ளார். அவரது சேவையின் சிறப்பு செவ்வனே கௌரவிக்கப்படுவதற்கு அவருக்காக எடுக்கப்படுகின்ற மணிவிழா நிகழ்வு சான்றாதாரமாக விளங்குகின்றது. கல்வி நிர்வாக உலகு மிகப் பொருத்தமான அதிபரையே இக்கல்லூரிக்கு வழங்கியுள்ளது.

உள்ளதை உவந்து சொல்லும் உத்தம அதிபர் அவர்கள் நல்லதோர் ஆரோக்கியத்துடனும் வல்லதோர் செயற்றிறனுடனும் தனது குடும்பத்தார் கூட்டுறவுடனும் இனிதே இருந்து தனக்கும் தன் குடும்பத்திற்கும் தான் வாழும் சமூகத்திற்கும் ஏற்றன ஆற்றி போற்றிடும் புகழை ஏற்றிட வேண்டும் என தென்னவன் பொன்னவனான இன்னரும் ஈசன் தன்னடி அதனை தொழுது கூடவே எனது நல்லாசிகளையும் நல்கி இவ் ஆசியுரைதனை நிறைவு செய்து கொள்கின்றேன்.

**ஸ்ரீ.வி.பாலகுமார குருக்கள்**
**சாவகச்சேரி.**



## வாழ்த்துச் செய்தி

1993 ஆம் ஆண்டில் கிளி/ மாசார் அ.த.க. பாடசாலையில் ஆசிரியப் பணியினை ஆரம்பித்த திரு.த.அம்பலவாணர் அவர்கள் அப்பாடசாலையிலேயே மூன்று வருடங்கள் கடமை நிறைவேற்று அதிபராகக் கடமையாற்றியுள்ளார். பின்பு அதிபர் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்ட இவர் தற்போது அதிபர் சேவை தரம் I இல் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியினது அதிபராகக் கடமையாற்றி ஓய்வில் செல்கின்றார்.

இவர் தனது சேவைக் காலத்தில் ஆசிரியராகவும், அதிபராகவும் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. மாணவர்கள் கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறப்பான அடைவுகளைப் பெறுவதற்கு இவர் வழிகாட்டியுள்ளார். இப்பாடசாலையினது மாணவர்கள் க.பொ.த. (சா/த) இல் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு வழிவகுத்ததோடு க.பொ.த. (உ/த) இல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய மூன்று துறைகளிலும் பெருமளவான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு வழிவகுத்துள்ளார். இப்பாடசாலையிலிருந்து பொறியியல், மருத்துவ பீடங்களிற்கும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் இப்பாடசாலை மாணவர்கள் மாகாண, தேசிய மட்டங்களில் இடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். இவர் தனது சேவைக்காலத்தில் மாணவர்களது கல்வி உயர்வுக்காக ஆற்றிய பணிகளைப் பாராட்டுவதோடு இவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமையவும் வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.**



## ஆசிச் செய்தி

கல்விப்பணி, சமூகப்பணி, மனிதநேயப் பணி பல புரிந்து மணிவிழாக் காணும் அன்புக்கும் மதிப்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய உயர்திரு.தம்பிராசா அம்பலவாணர் அவர்களை இந் நன்னாளில் வாழ்த்துவதிலும் இறையாசி வேண்டுவதிலும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மீசாலை என்னும் இடத்தின் கண் அமைந்துள்ள புகழ்பூத்த பாடசாலையான யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் கடந்த ஒன்பது வருடங்களாக மனிதநேயத்துடனும் கனிவுடனும் கருத்துரைக்கும் சான்றோனாக கடமையாற்றியதுடன் கல்லூரி மாணவச் செல்வங்களை நேசித்து அவர்களின் கல்வி வளர்ச்சியின் உயர்ச்சியில் பெரும்பங்காற்றிய உத்தமரை, மணிவிழாக்காணும் நாயகனை இந்நன்னாளில் நல்வாழ்த்துக்கள் கூறி ஆசி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**அருட்பணி கே.வி.மூர்த்தி**
**போதகர் 'வெப்ரிஸ்ற்' திருச்சபை**
**சாவகச்சேரி.**



## வாழ்த்துச் செய்தி

மணிவிழா நாயகன் திரு.த.அம்பலவாணர் அவர்கள் பளையினை பூர்வீகமாகக் கொண்டவர். இவர் தனது ஆசிரியப் பணியினை 1993 இல் ஆரம்பித்து பின்னர் அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து 01.01.2007 தொடக்கம் அதிபராக கடமையாற்றினார். 03.07.2013 தொடக்கம் 15.01.2022 வரை யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் அதிபராக பதவி வகித்த காலத்தில் கல்லூரியானது பௌதிக உட்கட்டமைப்பு, கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் இமாலய வளர்ச்சியடைந்து தென்மராட்சியின் முன்னணி பாடசாலையொன்றாக பெருவளர்ச்சி கண்டது.

இவர் எமது பாடசாலையினை தேசிய பாடசாலையாக தரமுயர்த்துவதற்கு முன்னின்று பணியாற்றியதன் காரணமாக யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் முதலாவது அதிபர் என்ற அந்தஸ்தைப்பெற்று கல்லூரி வரலாற்றில் தனக்கென இடம்பிடித்துக்கொண்டார். இவ்வாறு கல்லூரி வரலாற்றில் தன்னிகரில்லா சேவையைப்புரிந்த திரு.த.அம்பலவாணர் அவர்களின் ஓய்வுக்காலம் குடும்பத்தினருடன் சந்தோசமாகவும் ஆரோக்கியமானதாகவும் அமைய எல்லாம் வல்ல வேம்படி விநாயகனை பிரார்த்திக்கின்றேன்.

**க.கனகேஸ்வரன் , உப தலைவர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.**
**மேலதிக அரசாங்க அதிபர்,**
**மாவட்ட செயலகம் ,முல்லைத்தீவு.**



## மணிவிழா வாழ்த்துக்கள்

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபராக கடமையாற்றி அரச சேவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் திரு. த.அம்பலவாணர் அவர்களை வாழ்த்துவதில் உவகையடைகின்றேன். 1993.01.11 ஆம் திகதி கிளி/ மாசார் அ.த.க. பாடசாலையில் ஆசிரியராக தனது அரச சேவையினை தொடங்கி 04 ஆண்டுகள் ஆசிரிய பணியினை சிறப்பாக மேற்கொண்டுள்ளதுடன் மூன்றாண்டு காலம் கடமை நிறைவேற்று அதிபராக தனது பணியினை சிறப்பாக ஆற்றியதுடன் 2000.08.04 ஆம் திகதி முதல் அதிபர் சேவைக்கு தெரிவு செய்யப்பட்டார்.

2013.07.03 ஆம் திகதி முதல் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் தனது அதிபர் பணியினை தொடங்கி இன்றுவரை பாடசாலை செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டு மாணவர்களின் உயர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளார். கல்லூரியானது கற்றல் நடவடிக்கைக்கு மேலதிகமாக இணைப்பாட விதான செயற்பாடுகள் மற்றும் விளையாட்டுத் துறையில் மாகாண மட்ட மற்றும் தேசிய ரீதியில் பல வெற்றிகளை பெற்றுக்கொள்வதற்கான தனது சிறப்பான பங்களிப்பினை வழங்கி மாணவர்களை வழிநடத்தியுள்ளார். அந்த வகையில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் தனது ஓய்வுக்காலத்தினை சகல சிறப்புக்களுடனும் மகிழ்ச்சியாக கழிப்பதற்கு இறைவனின் அருளாசிகள் கிடைப்பதற்காக பிரார்த்திக்கின்றேன்.

**இ.இளங்கோவன் செயலாளர்**
**கல்வி அமைச்சு வடக்கு மாகாணம்.**



## தென்மராட்சி பிரதேச செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

யாழ்.மாவட்டத்தில் தென்மராட்சியின் கல்வி வளர்ச்சியில் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு என்று தனி ஒரு இடமுண்டு. தென்மராட்சியின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்கு அதிபர் திரு.த.அம்பலவாணர் அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

திரு.த.அம்பலவாணர் அவர்கள் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான 9 வருட காலப்பகுதியில் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய போது பல்வேறு உயர்ச்சிகளை இப் பாடசாலை கண்டுள்ளது. யாழ்.நகரின் முன்னணிப் பாடசாலைகளில் கிடைக்கும் பௌதிக வளங்கள் கணித,விஞ்ஞான பாடசெயற்பாடுகளை இப் பாடசாலையிலும் கிடைக்கச்செய்து இப் பிரதேச மாணவர்களை நவீன உலகின் சவால்களை எதிர்கொண்டு கற்கும் வகையில் உயர்வடையச் செய்தமை போற்றப்பட வேண்டியதாகும். இதனை அண்மைக்கால பரீட்சைப் பெறுபேறுகளை கொண்டு அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறாக கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் உயரிய சேவையாற்றி ஓய்வு பெறும் திரு.த.அம்பலவாணர் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

**திருமதி.சு.உஷா**
**பிரதேச செயலாளர், தென்மராட்சி.**



## அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் கடந்த ஒன்பது வருடங்களாக சிறந்த அதிபராகக் கடமையாற்றி 15.01.2022 அன்று ஓய்வு பெற்றுச் செல்லும் திருவாளர் தம்பிராசா அம்பலவாணர் அவர்கள் பளை பிரதேசத்தை பூர்வீகமாகக் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியை பளை மத்திய கல்லூரியிலும் உயர்கல்வியை யாழ். பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டவர். ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயின்ற திருவாளர் த.அம்பலவாணர் அவர்கள் ஆசிரியராக கிளிநொச்சி/மாசார் அ.த.க. பாடசாலையில் முதல் நியமனம் பெற்றுக்கொண்டவர். தனது ஆசிரியப் பணியின் சிறப்பினால் கிளி/மாசார் அ.த.க. பாடசாலையில் கடமை நிறைவேற்று அதிபராக கடமையேற்று பின் அதிபராக உயர்வு பெற்றவர். யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலையிலும், யா/மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்திலும் கடமையாற்றி நிறைவாக யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் 2013 ஆம் ஆண்டிலிருந்து ஓய்வு பெறும் வரை சிறந்த அதிபராக மாணவர்களுக்கான சேவையை சமூகத்தில் ஆற்றியுள்ளார்.

அதிபர் திருவாளர் த.அம்பலவாணர் அவர்களது ஓய்வுக்காலம் சிறந்த உடல், உள ஆரோக்கியத்துடன் அமையவும் பாராட்டி மணிவிழா நாயகனை வாழ்த்தி மன நிறைவடைகின்றேன்.

**க. மகேசன்**
**அரசாங்க அதிபர்**
**மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்.**



## மணிவிழா நாயகனிற்கு தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளரின் ஆசியுரை

திரு. த.அம்பலவாணர் அவர்கள் தென்மராட்சி வலயத்தில் தனக்கெனத் தனியிடம் பதித்த தண்ணளியுடைய அதிபர். 09 வருடங்கள் ஆசிரியராகவும் 20 வருடங்கள் அதிபராகவும் கல்வித் துறைக்கு இவர் ஆற்றிய பணிக்கு இவரது மாணவர்களும் இவரது வழிகாட்டலில் கற்பித்த ஆசிரியர்களும் என்றென்றும் சான்றாய் விளங்குவர். வீரசிங்கம் மத்திய கல்லூரியின் வெற்றிநடை போடும் கல்விப் பயணத்தின் கண்ணாக விளங்கியவர். இவருடைய காலத்தில் கலை, வர்த்தகப் பிரிவுகளில் மட்டுமன்றி மருத்துவம் மற்றும் பொறியியல் துறைகளிலும் மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர வழிசமைத்தவர். கல்வியில் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தனது மாணவர்களை தேசியம் வரை வெற்றிவாகை சூடச் செய்தார்.

சாந்தமே உருவாக சலனமின்றி சாதனைகள் புரிந்திட்ட இவரின் மணிவிழா நாளில் தனது மனையாளுடனும் முத்தான மூன்று கண்மணிகளுடனும் குடும்பமாய் குதூகலித்து வாழ்கவென வாழ்த்துகின்றேன். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் சமூகப் பணியைத் தொடர்ந்து புரியும் வல்லமையை இறைவன் இவருக்கு அருள வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

**[illegible]பாகரன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்**
**தென்மராட்சி வலயம்.**

(9666)



**திரு.த.அம்**
**B.A, Di**

## சேவ

அதிபர்: கிளி/ மாசா
04.08.20

அதி
கிளி/மாசார்
01.01.200

அதி
யா/கைதடி நாவற்
29.01.20

அதி
யா/மீசாலை வி
09.07.20

அதி
யா/மீசாலை வீரச
03.07.20

அதி
சமூகம்சார் பணிக்
16.



தான் செ
நேசித்தவர்.
செய்ய வேல
காலங்களில்
இற்றைவரை
உயர்விற்குப்
ஆசிரிய
இன்முகத்துட
பங்கு கொண்
வார்த்தைகளால் ஊக்கப்படுத்தி அறிவுரை
கல்லூரிச் சமூகத்தோடு ஒன்றித்து. சமூக
சமூகத்தின் நன்மதிப்பைத் தனதாக்கி
அகவையில் மணிவிழாக்காணும் இந்நன்
சௌபாக்கியங்களும் பெற்றுச் சீரோடும்
பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்து

திரும
பி
யா/மீசாலை வீர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூரியின் அதிபர்
# ன் மணிவிழா சிறப்புமலர்



ம்பலவாணர்
Dip.in.Edu

## வை விபரம்

மாசார் அ.த.க. பாடசாலை
2000–31.12.2006

அதிபர் பதவி II
ர் அ.த.க.பாடசாலை
2007–28.01.2009

அதிபர் பதவி I
வற்குழி அ.த.க.பாடசாலை
2009–08.07.2009

அதிபர் பதவி I
விக்கினேஸ்வரா ம.வி.
2009–02.07.2013

அதிபர் பதவி I
வீரசிங்கம் மத்திய கல்லூரி
2013–14.01.2022

அதிபர் பதவி I
னிக்கள் - சமாதான நீதவான்
16.11.2011

### வாழ்த்துரை

ன் செய்யும் வேலையைக் கடமையுணர்வோடு
வர். எந்தெந்த வேலைகளை எந்தெந்தக் காலங்களில்
வேண்டுமோ அந்தந்த வேலைகளை அந்தந்தக்
ளில் செய்து முடித்தவர். 2013 நடுப்பகுதி தொடக்கம்
வரை எமது பாடசாலையில் கடமையாற்றி கல்லூரியின்
ற்குப் பெரும்பணி ஆற்றியவர் திரு.த.அம்பலவாணர்.
சிரிய சமூகத்திடையே ஏற்றத்தாழ்வு பாராட்டாது
த்துடன் பழகி அவர்களது சுகதுக்கங்களில் தானும்
காண்டு. நண்பராக மதித்து இதமான மென்மையான
வுரை பகிர்ந்து ஆற்றுப்படுத்துவதில் வல்லவர். எமது
சமூகம்சார் மேம்பாட்டுக்காய் உழைத்துக் கல்விச்
கிக் கொண்டவர். எமது அதிபர் தனது அறுபதாவது
ந்நன்நாளில் அவரும் அவர்தம் குடும்பத்தினரும் சகல
டும் சிறப்போடும் நீடூழி வாழ வேம்படி விநாயகரின்
த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திருமதி.க.மகிர்தன்
பிரதி அதிபர்
ல வீரசிங்கம் மத்திய கல்லூரி



### மணிவிழா நாயகனுக்கு மகிழ்வான வாழ்த்துக்கள்

தென்மராட்சிக் கல்வி வலயத்திலுள்ள முன்னணிப் பாடசாலையான யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் எட்டு வருட காலப்பகுதி வரை கடமையாற்றியதுடன் தனது கல்விப்பணிக்காலச சேவையாக 29 வருடங்கள சேவை யாற்றியவர் அதிபர் திரு.அம்பலவாணர்.

வினைத்திறன் மிக்க கற்றல், கற்பித்தல் செயற் பாட்டின் ஊடாக நாடு தோறும் நற்பிரஜைகளை உரு வாக்கலாம் என்ற உயரிய எண்ணத்தோடு கிளிநொச்சி மாவட்டத்தில் தலைசிறந்த ஆசிரியராக தனது கடமைகளையும், பொறுப்புக்களையும் ஏற்று அதனை உயர்வடையச் செய்து பல சாதனைகளைப் படைத்து அதிபராக சகல துறைகளிலும் தனது பணியைப் பறைசாற்றி தனது சாதனைகளை பெற்றிருந்தார். இவரது அறுபதாவது வயதுப் பூர்த்தியை முன்னிட்டு யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மணிவிழாக் குழு வினைத்திறனாக வெளியிடும் மலர் சிறப்படைய வேண்டும் எனவும், மணிவிழா நாயகன் இன்புற்று நோயற்று வாழ வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

அதிபர்,
க.இளங்கோவன்,
யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்,

### தென்மராட்சி அதிபர் சங்கத்தின் வாழ்த்துரை



திருவாளர் த.அம்பலவாணர் அதிபர் அவர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள மாசார் பளையை சொந்த இடமாகக் கொண்டவர். அந்த வகையில் 1993.01.11 அன்று கல்விப் புலத்தில் ஆசிரியராகக் கடமையேற்று கிளி/மாசார் அ.த.க.பாடசாலையில் கடமை நிறைவேற்று அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றி நிர்வாக முகாமைத்துவத்திலே தன்னை வளப்படுத்திக் கொண்டு தென்மராட்சியிலும் தனது சேவையை வழங்க எண்ணினார். அந்த வகையில் யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை, யா/ மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் அதிபராக இருந்து அளப்பரிய சேவையினை வழங்கியுள்ளார்.

2013 ஆம் ஆண்டு யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் கடமையினைப் பொறுப்பேற்றுக் கொண்ட திருவாளர் அம்பலவாணர் அவர்கள் 15.01.2022 வரையான சேவையின் நிறைவுக்காலம் வரை சிறப்பான சேவையினை வழங்கியுள்ளார். ஓய்வுக்காலம் வரும்வரை எவ்விதமான தளர்வுமின்றி தனது ஆளுமை மிக்க தலைமைத்துவத்தின் கீழ் 1AB தரம் கொண்ட கல்லூரியினை நடத்திய பெருமை இவருக்கே உரியது.

எனவே இதுவரை காலமும் தனது அதிபர் ஆசனத்தை அலங்கரித்து நின்றதோடு அரும்பணியாற்றி, பணிநிறைவு காணும் திருவாளர் த.அம்பலவாணர் அதிபர் அவர்களின் நற்பணியை நயந்து பாராட்டி வாழ்த்துவதில் தென்மராட்சி அதிபர் சங்கம் பேருவகை அடைகின்றது.

அன்னாரின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியாகவும், நோய் நொடியின்றியும் அமைய எல்லாம் வல்ல இறையருள் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்
அதிபர் சங்கம் தென்மராட்சி.



### அதிபர் அம்பலவாணர் வீரசிங்கம் மத்திய கல்லூரி வளர்ச்சியில் ஒரு மைல்கல்

அதிபர் உயர்திரு.தம்பிராசா அம்பலவாணர் அவர்கள் தனது மூன்று தசாப்த காலத்திற்கும்மேலான ஆசிரியப்பணி மற்றும் பாட சாலை அதிபர் பணியிலிருந்து தனது அறுபதாவது வயதில் ஒரு அரச உத்தியோகத்தராக இளைப்பாறுவதுடன் வாழ்க் கைப் பயணத்தின் முக்கியமான அவத்தையாகிய மணிவிழா வயதை நிறைவு செய்வதையிட்டு எடுக்கப்படும் பெருவிழாவில் அவரது பணி சிறப்புக் குறித்து எனது எண்ணங்களை வார்த் தைகளாக வரிகளில் சேர்ப்பது ஆனந்தத்திலும் ஆனந்தம்.

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அடியேன் கல்வி பயின்ற முதலாவது பாடசாலை. எனது மாணவப் பருவத்தின் முதல் எட்டு வருடங்கள் மேற்படி யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியிலேயே கழிந்தது. ஒரு மழலையாக, பிள்ளையாக, துடுக்கு நிறைந்த சிறுவனாக வீரசிங்கம் மத்திய கல்லூரித் தாயின் மடியில் உருண்டு புரண்டிருக்கின்றேன். எனது கல்லூரித்தாயின் காவலர்களாக எத்தனையோ அதிபர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து போயிருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் ஏதோ விதத்தில் தமது முத்திரையை பதித்து சென்றிருக்கின்றார்கள்.

அதிபர் தம்பிராசா அம்பலவாணர் அவர்கள் தனது கல்வித்துறை சார்ந்த அரச பணியில் முதல் நான்கு வருடங்கள் ஆசிரியராகவும் பின்னர் வந்த ஆண்டுகளில் கடமை நிறைவேற்று அதிபராக, பதில் அதிபராக மற்றும் அதிபராக கல்வித்துறையின் நிர்வாக கட்டமைப்புக்குள் உள்ளீர்க்கப்பட்ட ஒருவராக தொடர்ச்சியாக கடமையாற்றி வந்துள்ளமை அவரது சேவைக்காலத்தை தெரிந்து கொள்ளும்போது அறியக் கிடைக்கின்றது.

ஒரு அரச பணியாளரின் சேவை இளைப்பாறுதல் என்பது குறித்த பணியாளர் அரச பணியின் உச்ச வயது எல்லையை அடைகின்ற பொழுது தவிர்க்க முடியாததாக இருந்தாலும் அதிபர் உயர்திரு. தம்பிராசா அம்பலவாணரை பொறுத்த வரையில் அவருக்கும் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான பிணைப்பு இலகுவில் அறுந்து போகக் கூடிய ஒன்று அல்ல.

அதிபர் உயர்திரு.தம்பிராசா அம்பலவாணர் அவர்களது மணிவிழா பெருவிழாவாக அமையவும் அவரது பணி ஓய்வுக்காலம் வயது கடந்தும் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்கு ஊக்கமாக அமைய வாழ்த்தியும் அதிபர் அவர்கள் நிறைவான உடல் ஆரோக்கியத்துடன் விளங்கவும் எல்லாம் வல்ல வேம்படி விநாயகர் அருள்பாலிப்பாராக எனவும் வேண்டி அமைகின்றேன்.

இவ்வண்ணம்
[illegible]
பழைய மாணவன்.



### பொறுமையின் சின்னம்

நண்பர் அம்பலவாணர் அவர்களின் பொறுமை, தன்னடக்கம் யாரையும் மனங்கோணாது அரவணைத்து செல்லும் இயல்பான சுபாவம், மாணவர்கள் ஆசிரியர்களிடம் காட்டும் மனிதநேயம், நேர்மனப்பாங்கு போன்ற பண்புகள் அவர் தனது சேவையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு உறுதுணையாக இருந்தன. யா/வீரசிங்கம் மத்திய கல்லூரியில் அதிபராக இருந்தபோது கல்விப் பெறுபேறுகள் உயர்நிலையில் இருந்தமையைக் காண முடியும் குறிப்பாக க.பொ.த.(உ/த) பிரிவில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறையில் பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி இருந்தமை அவருக்கு பெருமை சேர்க்கின்றது இந்த வகையில் அன்னார் காலத்தின் கட்டளையின் பேரில் ஓய்வு பெற்றாலும் ஓய்வுக்காலத்தில் தனது குடும்ப சகிதம் எல்லா சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றேன்.

திரு.வ. நடராசா
கோட்டக்கல்விப் பணிப்பாளர், சாவகச்சேரி.



### வாழ்த்துச் செய்தி

எமது அதிபர் திரு.த.அம்பலவாணர் அவர்கள் கடந்த இருபத்தெட்டு வருடங்களுக்கு மேலாக கல்விச் சமூகத்திற்கு சேவையாற்றியுள்ளார். அதில் எமது கல்லூரியில் எட்டு வருடங்களுக்கு மேலாக அதிபராக சேவையாற்றி எமது பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றியுள்ளார்.

எமது அதிபரின் காலத்திலேயே எமது பாடசாலை தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. மேலும் இவரது காலத்தில் எமது கல்லூரியில் கல்வி பயின்ற பல மாணவர்கள் கல்விசார் மற்றும் இணைப்பாடவிதானப் போட்டிகளில் பங்குபற்றி தேசியமட்டம் வரை சென்று வெற்றியீட்டி எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இத்தகைய பெருமைகளைக் கொண்ட எமது அதிபரின் கல்விச் சேவையில் இருந்தான ஓய்வுக்காலம் மிகச் சிறப்பாக அமைய வேண்டும். அவர் அவரது குடும்பத்தவர்களுடன் மகிழ்ச்சியாகவும் மனநிறைவுடனும் இருப்பதற்கு எமது கல்லூரியில் வீற்றிருக்கும் வேம்படி விநாயகர் அருள்புரிய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

திருமதி. தீபன். தனுசா
செயலாளர், ஆசிரியர் நலன்புரிக் கழகம்.
யா/மீசாலை வீரசிங்கம் ம.க.



### போற்றி மகிழ்கின்றேன்

மீசாலை வீரசிங்கம் வித்தியாலயமானது ஆரம்பிக்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு நூறு வருடங்களை நிறைவு செய்து நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவுள்ள வேளையில் இக்கல்லூரியின் பதினோராவது அதிபராகக் கடமையேற்று எட்டரை ஆண்டுகள் மிகவும் சிறப்பாக கடமையாற்றி 15.01.2022 அன்று ஓய்வு பெற்று மணிவிழாக் காணும் திரு.த.அம்பலவாணர் அவர்களது மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்கி வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றேன்.

இவரது காலத்தில் இவ்வித்தியாலயமானது வழமைபோன்று மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பல சாதனைகளை நடத்தி பலரது பாராட்டினையும் பெற்று தேசிய பாடசாலையாக தரம் உயர்வதற்கும் காரணமாக இருந்து கடமையாற்றி ஓய்வு பெறும் திரு.த.அம்பலவாணர் அவர்களது ஓய்வுக்காலம் நோய் நொடியின்றி மகிழ்வாக வாழ்ந்திட எல்லாம் வல்ல வேம்படி விநாயகரை வேண்டிய பணிந்து போற்றி வாழ்த்துகின்றேன்.

கு.சிவானந்தம்
ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர், முல்லைத்தீவு
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,தென்மராட்சி
வீரசிங்கம் ம.வி.முன்னாள் அதிபர்.



### வாழ்த்துச் செய்தி

இக்கல்லூரியில் எமது அதிபர் திரு.த.அம்பலவாணர் அவர்களின் கல்விப் பணியானது மிகவும் பெறுமதியானது. அவரது உயர்ந்த சேவையினை நாம் அனைவரும் போற்றி நிற்கின்றோம். மாணவர் நலனையே உயிர மூச்சாகக் கொண்டு இக் கல்லூரியின் கல்வி அடைவுகள், இணைப்பாட விதான செயற்பாடுகள், மாணவர் நலனோம்பு நடவடிக்கைகள், மாணவர் ஒழுக்கம், கட்டுமான மேம்பாடு, சுற்றுப்புற மேம்பாடு முதலான அனைத்து விடயங்களிலும் சிறப்பான முன்னேற்றம் கண்டு இலங்கையின் கல்விப் புலத்தில் ஏனையவர்களினால் மதிக்கத்தக்க வகையில் பணியாற்றி கல்லூரிக்கு பல வகையிலும் பெயரையும் புகழையும் பெற்றுத்தந்ததோடு காலத்தால் அழியாத பல சாதனைகளையும் நிலைநாட்டியுள்ளார் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

அந்த வகையிலே அவரது பணியை நினைவுகூர்ந்து தம் அதிபர் சேவையிலே நிறைவு பெற்று மணிவிழாக்காணும் இந்நாளிலே அவரது ஓய்வுக்காலம் சிறப்பாகவும், மகிழ்ச்சியாகவும் அமைவதோடு நீடூழி காலம் வாழ வேண்டும் என இறைவன் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி. P. சுஜாதா
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திக் குழு.



### ஆற்றல்மிகு செயல் வீரன்

எமது பாடசாலையின் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட திருவாளர் த.அம்பலவாணர் தன் எண்ணங்களாலும் செயல்களாலும் மற்றவர் மனங்களை அறிந்து செயலாற்றும் வல்லமை மிக்கவர். இவர் எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகள் அனைத்துக்கும் பெரும் ஆதரவு கொடுத்து தனது காலத்தில் கல்வி, விளையாட்டு, பௌதீகவள விருத்தி, மைதான புனரமைப்பு விழாக்கள் என தன் காலத்தை பாடசாலையின் பொற்காலமாக மாற்றிய பெருமைக்குரியவர். இவர்தம் நிர்வாக காலத்தில் பல தேசிய வெற்றிகளையும் பாடசாலை பெற்றுக் கொண்டமை யாவராலும் மறக்க முடியாத விடயங்கள்.

இவ்வாறு தன் கடமையை இனிதே சிறப்பான முறையில் ஆற்றி பதினைந்தாம் திகதி இளைப்பாறும் அதிபர் தன் குடும்பத்தாருடன் பல்லாண்டு சிறப்புற்று வாழ வேம்படி விநாயகன் ஆசிகளை வேண்டி வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

திரு சி.சிவானந்தம்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு நாள் போராட்டத்தால்
# 70 லட்சத்தை இழந்த புகையிரத திணைக்களம்

(கொழும்பு)

ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்கப் போராட்டத்தினால் 70 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பயணிகளை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி இவ்வாறு திடீர் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுப்பது எந்த வகையிலும் நியாயமற்றது என புகையிரத திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

இந்தத் தொழிற்சங்கப் போராட்டம் குறித்து ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் எந்தவிதமான முன்னறிவித்தலையும் வழங்கவில்லை என அவர் குற்றம் சுமத்தினார்.

போராட்டம் முன்னெடுப்பதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னரே இது குறித்து அறிவிக்கப்பட்டது என அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# கின்னஸில் இடம் பிடித்த நீல நிற இரத்தினக் கல்

(கொழும்பு)

இரத்தினபுரியில் கடந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட 500 கிலோ எடையுள்ள நீல நிற இரத்திக்கல் உலகின் மிகப் பெரிய சபையர் இரத்தினக்கல் கொத்து என கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.

இது குறித்து தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (நி)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## எதிரிகளை வெல்லும் வரம் தரும் நரசிம்மர்



பிரகலாதன் அவரை வலம் வந்து பாதங்களில் வணங்கி, பரந்தாமா பந்த பாசங்கள், ஆசை, மோகம் ஆகியவை படு குழியில் விழாமல் தங்கள் திருவடியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். உடனே நரசிம்மர், 'பிரகலாதா என் பக்தர்கள் பற்றற்ற நிலையில் இருப்பார்கள். அவர்களை ஆசா பாசம் எதுவும் பிடிக்காது. நீ பூலோகத்தை ஆண்டு கடைசியில் என்னை வந்து சேருவாயாக' என்றார்.

பின்னர் பிரகலாதனுக்கு முடி சூட்டப்பட்டது. அவன் நீதி தவறாமல் உலகத்தை ஆண்டு வந்தார்.

### வழிபடும் முறை

நரசிம்ம ஜெயந்தியன்று அதிகாலை குளித்து, வீட்டை சுத்தம் செய்து பூஜையறையில் சுவாமி படத்திற்கு முன்பு விளக்கேற்றி வழிபட வேண்டும். அன்று பகல் முழுவதும் உணவின்றி நீராகரமாகப் பருகி, நரசிம்மர் ஸ்தோத்திரம் கூறி வழிபடலாம். அன்று மாலை 4.30 மணி முதல் 7.30 மணிக்குள் வழிபட வேண்டும். விஷ்ணு வழிபாட்டில் பயன்படுத்தும் மலர்கள், வஸ்திரம், நைவேத்தியம் ஆகியவற்றை உபயோகிக்க வேண்டும். செவ்வரளி மலரால் அர்ச்சனை செய்து, சர்க்கரை பொங்கல், பானகம் போன்ற இனிப்புகளை படைக்கலாம். அறிந்தோ, அறியாமலோ செய்த பாவங்களால் கிடைத்து வரும் தண்டனையில் இருந்து விடுபட லட்சுமி நரசிம்மரை வழிபட வேண்டும். நரசிம்மரை முழுமையாக சரணடைந்து 'ஓம் நமோ நாராயணாய' எனக் கூறி வழிபட்டால் தாயுள்ளம் படைத்த அவர் தண்டனையில் இருந்து விடுதலை கிடைக்க செய்வார்.

அவரது படத்தை பூஜை அறையில் கிழக்கு நோக்கி வைக்க வேண்டும். தினமும் குளித்துவிட்டு நரசிம்ம பிரபத்தி ஸ்லோகத்தை 3, 12, 28, என பாராயணம் செய்ய வேண்டும். 'நரசிம்மரே தாய் ; நரசிம்மரே தந்தை, சகோதரனும் நரசிம்மரே, தோழனும் நரசிம்மரே, அறிவும் நரசிம்மரே, செல்வமும் நரசிம்மரே, எஜமானனும் நரசிம்மரே, இவ்வுலகத்தில் நரசிம்மரே, அவ்வுலகத்திலும் நரசிம்மரே, எங்கெங்கு செல்கிறாயோ அங்கெல்லாம் நரசிம்மரே. நரசிம்மரைக் காட்டிலும் உயர்ந்தவர் எவரும் இல்லை. அதனால் நரசிம்மரே உம்மை சரணடைகிறேன். இந்த சுலோகத்தை சொல்லி லட்சுமி நரசிம்மரின் முன்விளக்கேற்ற வேண்டும். காய்ச்சி ஆற வைத்த பசும்பால் அல்லது பானத்தை நைவேத்தியம் செய்ய வேண்டும்.

இந்த பிரசாதத்தை குடும்பத்தினர் அனைவரும் சாப்பிட்டு வர வேண்டும். கைமேல் பலனளிக்கும் சக்தி படைத்த சுலோகம் இது.

(தொடரும்)

# 900 மில்லியன் டொலரை வழங்கியது இந்தியா

(கொழும்பு)

இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பை வலுப்படுத்துவதற்காக இந்தியா, இலங்கைக்கு 900 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது.

இந்த விடயத்தை இலங்கைக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

உயர்ஸ்தானிகர் மத்திய வங்கியின் ஆளுநரை சந்தித்து இந்தியாவின் ஆதரவை இலங்கைக்கு தெரிவித்ததாக உயர் ஸ்தானிகர் டுவீட் செய்துள்ளார்.

அதற்கமைய, இந்திய உயர்ஸ்தானிகராலயம் இலங்கைக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர் நாணய பரிமாற்றம் உட்பட 900 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி வசதியை நீடிப்பதை உறுதிப்படுத்தியுள்ளது. (நி)

# கொழும்பில் மீண்டும் பொலிஸ் பதிவுகள்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் தொழில் நிமித்தமோ வேறு காரணங்களுக்காகவோ தற்காலிகமாக தங்கியிருக்கும் அனைவரையும் உடன் பதிவு செய்யும் திட்டமொன்று பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண பிரஜைகள் பொலிஸ் பிரிவூடாக இந்தத் திட்டம் "தேசிய பாதுகாப்பை உறுதி செய்வோம்; குற்றம், போதைப் பொருளை ஒழிப்போம்" எனும் தொனிப் பொருளின் கீழ் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு மற்றும் குற்றங்களை தடுத்தல் ஆகியனவே இந்தப் பதிவின் நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், கடந்த யுத்த காலத்தின் போதும், கொழும்பில் தங்கியிருந்தவர்கள் மீது இத்தகைய பொலிஸ் பதிவு முறைமை ஒன்று அமுலில் இருந்த நிலையில், அதனை ஒத்த கெடுபிடிகளுக்கு தற்போது அறிமுகப்படுத்தப்படும் பதிவு முறைமையும் வழிகோலுமா? என பொதுமக்கள் பீதியடைந்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 280 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 150 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 600 |
| தக்காளி | 180 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 60 |
| கோவா | 260 | 250 | 300 |
| கரட் | 440 | 450 | 550 |
| பூசணி | 100 | 80 | 120 |
| புடோல் | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 240 | 400 |
| பெரிய வெங்காயம் | 170 | 180 | 200 |
| பாகற்காய் | 400 | 350 | 500 |
| வெண்டிக்காய் | 240 | 180 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 500 | 700 | 400 |
| லீக்ஸ் | 260 | 250 | 350 |
| பீற்றூட் | -- | -- | 400 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 |
| முருங்கைக்காய் | -- | 1000 | -- |
| போஞ்சி | 450 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 70 | 80 | 100 |
| தேசிக்காய் | 150 | 150 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 260 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 400 | 450 | 600 |
| முள்ளங்கி | 80 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 70 | 80 | 50 |
| வல்லாரை | 30 | 20 | 40 |
| ஈரப்பலா | 100 | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதற்றம் அதிகரித்தால் படைகளை குவிப்போம்

## அமெரிக்காவிற்கு ரஷ்யா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்காவுடனான பதற்றம் அதிகரித்தால் கியூபாவிலும் வெனிசுவேலாவிலும் படைகளை குவிப்போம் என ரஷ்யா எச்சரித்துள்ளது.

இது குறித்து ரஷ்யாவின் வெளியுறவுத் துறை இணையமைச்சர் செர்கெய் ரியப்கோவ் கூறுகையில், 'உக்ரேய்னையோ சோவியத் ஒன்றியத்தில் அங்கம் வகித்த மற்ற நாடுகளையோ நேட்டோ அமைப்புதன்னுடன் இணைத்துக் கொள்ளக் கூடாது என்று ரஷ்யா வலியுறுத்தி வருகிறது. அத்தகைய கூட்டுறவை ஏற்படுத்திக்கொள்ளப் போவதில்லை என்ற உத்தரவாதத்தை ரஷ்யா எதிர்பார்க்கிறது.

ஆனால், அவ்வாறு உத்தரவாதம் அளிக்க நேட்டோ அமைப்பும் அமெரிக்காவும் பிடிவாதமாக மறுத்து வருகின்றன.

அந்த வகையில், ரஷ்யாவுக்கும் நேட்டோவுக்கும் இடையிலான அணுகுமுறை எதிரும் புதிருமாக உள்ளது. எனவே, இரு தரப்பினருக்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படுவது சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் நேட்டோவுடனான பதற்றம் தொடர்ந்து அதிகரித்தால், அதனை எதிர்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ரஷ்யா மேற்கொள்ளும்.

அந்த நடவடிக்கைகளில் ஒன்றாக, அமெரிக்காவுக்கு அருகே அமைந்துள்ள கியூபாவிலும் வெனிசுவேலாவிலும் ரஷ்யப் படைகள் குவிக்கப்படுவதற்கான வாய்ப்புகளையும் மறுக்க முடியாது' என அவர் தெரிவித்தார். (நி)

# இந்தியாவின் பொருளாதாரம் திடமான பாதையில் உள்ளது

## ஐ.நா.அறிக்கை

(டில்லி)

இந்தியாவின் பொருளாதாரம் திடமான பாதையில் மீண்டு வருவதாக ஐ.நா. சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி 6.5 சதவீதமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

விரைவான தடுப்பூசி முன்னேற்றம், கடுமையான சமூகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்கு நடுவே நாட்டின் பொருளாதாரம் திடமான பாதையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் நிலப் பற்றாக்குறை மற்றும் அதிகரிக்கும் எண்ணெய் விலைகள் ஆகியவை பொருளாதார நடவடிக்கைகளுக்கு தடையை ஏற்படுத்தக்கூடும் எனவும் ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ஏவுகணை சோதனை எதிரொலி

# வடகொரிய அதிகாரிகள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை

(பியாங்யாங்)

வடகொரியாவின் அண்மைய தொடர்ச்சியான ஏவுகணை சோதனைகளுக்குப் பதிலடியாக, நாட்டின் 5 அதிகாரிகள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

வடகொரியாவின் ஏவுகணைத் திட்டத்துக்குத் தேவையான பொருட்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பெற்றுத் தந்த 5 அதிகாரிகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படுவதாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, வடகொரிய ஆயுதத் தயாரிப்பு திட்டங்களுக்கு உறுதுணையாக இருக்கும் மேலும் ஒரு வடகொரியர், ஒரு ரஷ்யர், ஒரு ரஷ்ய நிறுவனம் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படுவதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒலியைப் போல் 5 மடங்கு வேகமான (ஹைப்பர்சோனிக்) ஏவுகணையை மூன்றாவது முறையாக கடந்த செவ்வாய்க்கிழமை பரிசோதித்துப் பார்த்ததாக வடகொரியா அறிவித்தது.

அதற்குப் பதிலடியாகவே வடகொரிய அதிகாரிகள் மீது அமெரிக்கா தற்போது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## உலகெங்கும் உள்ள தமிழர்கள் உற்சாகக் கொண்டாட்டம்

(சென்னை)

தமிழர் திருநாளாம் தை முதல் நாளான நேற்று பொங்கல் பண்டிகை உலகெங்கும் வெகு கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் தங்கள் பாரம்பரிய வழக்கம் மாறாமல், வீடுகளில் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்ந்தனர். (நி-5)



# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பெருந்தன்மையும், அதைப் பெறும் தன்மையும்

பெருந்தன்மை என்றால் என்ன?

நான் அறிந்தவரையில், நான் படித்த வரையில், நான் விசாரித்த வரையில் எனக்கு மேற்கண்ட சொல்லிற்கு மட்டும் நிறைவான விளக்கம் கிடைக்கவில்லை.

பின்னர், என்னை நானே கேட்டுக் கொண்டேன் கிடைத்தது. மற்றவர் நலனில் அக்கறை கொள்வது; அவர்களை நம்முடைய நிலையில் வைத்துப் பார்ப்பது; மற்றவர்களின் தவறுகளை மறப்பது; மன்னிப்பது; தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்வது; உதவுவது; ஆகியவையே பெருந்தன்மையின் அடிப்படையான இலக்கணம்.

இவற்றில் விடுபட்டுப் போனவற்றை விபரமறிந்தவர்கள் தெரிவிக்கட்டும். நாம் மேலே செல்வோம். பெருந்தன்மை என்றால் என்ன என்பதை உணராத வரையில் அதன்படி நடக்க இயலாது அல்லவா?

இப்போது ஓரளவு தெளிவு பிறந்துவிட்டது.

இவற்றைப் பின்பற்ற ஆரம்பித்து நாம் ஏன் மற்றவர்களின் இதயத்தில் குடியேற முயற்சி செய்யக் கூடாது?

இத்தகைய குணங்கள் இரத்தத்தில் ஊறியிருக்க வேண்டும். இனிமேல் பின்பற்றுவதாவது? என்பவர்களுக்கு ஒரு வார்த்தை அத்தனை தன்மைகளையும் ஒரே நாளில் பின்பற்ற முடியாது என்பது என்னவோ உண்மைதான். ஆனால் ஒவ்வொன்றாகக் கைக் கொள்ள முயலலாமே.

மேலும், இவற்றைப் பின்பற்றுவதன் மூலம் ஏற்படக் கூடிய பலன்களை ருசி கண்டு விட்டீர்களானால் பிறகு உங்களை யாராலும் தடுக்க முடியாது என்று சொல்லப்படும் நிலைக்கு நீங்கள் உந்தப்பட்டு விடுவீர்கள்.

இப்படியெல்லாம் நடந்து கொண்டால், நாம் நம் கொள்கைகள், நம் உடைமைகள், இன்னும் எல்லாவற்றையும் இழக்க வேண்டியது தான் என்று ஒரு சிலர் வாதிடக் கூடும்.

அப்படித் தியாகியாகவோ சந்நியாசியாகவோ மாறிவிட வேண்டும் என்றும் பொருளல்ல.

ஓர் எல்லைக்கு உட்பட்டு மேற்கூறியவற்றை முடிந்தவரை பின்பற்றலாம்.

ஆனால் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். மிஞ்சப் போவது உயிரல்ல, நம்முடைய உடைமைகளும் அல்ல. நற்பெயர் ஒன்று தான்!

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## நம்பிக்கைத் துரோகம்

"அப்படியே செய்கிறேன்," என்று வாக்குறுதி கொடுத்து விட்டு, மன்னரிடம் விடை பெற்றுச் சென்றார் மந்திரி. மறுநாளே, மன்னரின் தம்பியைப் பார்ப்பதற்காக மந்திரியார் சென்றார்.

மந்திரியின் திடீர் விஜயத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார், மன்னரின் தம்பி.

ஏது இவ்வளவு தூரம்? எனது தமையனார் ஏதும் சொல்லியனுப்பினாரா? என்று மந்திரியைப் பார்த்து ஆவலுடன் கேட்டார், மன்னரின் தம்பி.

விடயம் பெரியதுதான். அதுவும் பரம ரகசியம்! தங்களைக் கொல்லுவதற்கு தங்கள் தமையனாரான அரசர் முடிவு செய்துள்ளார். இந்த ரகசியத்தை என்னிடம் மட்டுமே கூறினார்.

காரணம், அவருக்கு என் மீது அளவு கடந்த நம்பிக்கை. அதனால் தாங்கள் உஷாராயிருப்பது நல்லது. இந்த விடயத்தைச் சொல்லிவிட்டுப் போகவே நான் வந்தேன், என்று ரகசியத்தை அவிழ்த்து விட்டார் மந்திரி.

"நன்றி மந்திரியாரே! தக்க சமயத்தில் வந்து விடயத்தைச் சொன்னீர்! நான் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள உதவி செய்தீர்கள்! உங்களுக்கு என்றாவது ஒருநாள் நான் பெரிய வெகுமதி அளிப்பேன்," என்று கூறி, மந்திரியை அனுப்பி வைத்தார் மன்னரின் தம்பி.

ஒரு சில நாட்கள் சென்றன. மன்னர் இயற்கை எய்தினார், தம்பி பட்டத்திற்கு வந்துவிட்டான்!

மந்திரிக்கோ பெருத்த உற்சாகம்! ரகசியத்தை வெளியிட்டமைக்கு புதிய மன்னரிடம் இருந்து பெரிய வெகுமதிகள் கிடைக்கும் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.



அரசபதவியேற்ற அடுத்த நாளே, தம்பி போட்ட முதல் உத்தரவு மந்திரிக்கு மரண தண்டனை என்பது தான்!

மன்னரின் உத்தரவைக் கேட்டு, மந்திரி அதிர்ச்சி அடைந்தார். "நான் தங்களுக்குச் செய்த உதவிக்குத் தாங்கள் கொடுப்பதாகச் சொன்ன பெரிய வெகுமதி இதுதானா?" என்று மன்னரைப் பார்த்துக் கேட்டார் மந்திரி.

"ஆம், மந்திரியாரே! மன்னர் சொன்ன பரம ரகசியமான விடயத்தை மற்றவர்களிடம் போய்ச் சொல்லுகிற எவனும் மரண தண்டனை அடைவதே நியாயம் ஆகும்.

அந்தப் பயங்கரக் குற்றத்தை நீர் செய்திருக்கிறீர்! உங்களிடம் நம்பிக்கை வைத்து என் தமையனார் சொன்ன ரகசியத்தை உடனே, என்னிடம் ஓடி வந்து சொன்னீரல்லவா? என் தமையனாருக்குத் துரோகம் செய்த நீர், எனக்கும் துரோகம் செய்யமாட்டீர் என்பது என்ன நிச்சயம்? குற்றங் களுக்கு ஏற்ப தண்டனை வழங்கப்படுதல் மரபுதான்.

ஆனால், நம்பிக்கைத் துரோகம் என்ற குற்றத்துக்கு மரண தண் டனை வழங்குவதுதான் நியாயம் ஆகும்!" என்றார்.

மந்திரிக்கு நிறைவேற்றப்பட்ட மரண தண்டனை, நம்பிக்கைத் துரோகம் செய்பவர்களுக்கு ஒரு பாடமாக அமைந்து விட்டது!

(முற்றும்)

# மகாபாரதம்

304



இப்போதுசாபவிமோசனம் கிடைத்து விட்டது. இனி நீ அவரைப் பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை. தேவி..ஒன்றை மட்டும் நன்றாகப்புரிந்து கொள். அந்த ஷத்திரிய வீரன் சிகண்டியினால் கொல்லப்படவில்லை. தனஞ்செயனால் கொல்லப்பட்டார்.

தேவர்கள் அனைவரும் திரண்டு வந்தாலும் அவரை வெற்றி கொள்ள முடியாது என்பதை நீ அறிவாய். வசுக்கள் உலகை அடைந்த உன் மைந்தனை எண்ணி நீ பெருமைப்பட வேண்டுமே தவிர துயரம் கொள்ளக் கூடாது" என்று ஆறுதல் கூறினார்.

கண்ணனின் ஆறுதல் கேட்டுச் சாந்தம் அடைந்த தெய்வமகள் நீரில் இறங்கினாள். பின் அனைவரும் கங்காதேவியை வணங்கினர். அத்திருமகள் விடை தர அனைவரும் திரும்பிச் சென்றனர்.

**அஸ்வமேதிக பருவம்**

பீஷ்மரின் மறைவு தருமரை மிக்க துயரத்தில் ஆழ்த்தியது. பாரத யுத்தம் முடிந்த போது ஏற்பட்ட சோகம் மீண்டும் அவரைச்சூழ்ந்தது. தருமருக்கு, திருதராட்டிரரே ஆறுதல் சொன்னார்.

"மகனே! நீ இவ்வுலகை ஷத்திரிய தருமப்படியே வெற்றி கொண்டாய். இனி நீ துயரப்பட வேண்டாம். நானும், காந்தாரியும் தான் துயரம் அடைய வேண்டும். ஏனெனில்எங்களது நூறு பிள்ளைகளும் மறைந்து விட்டனர்.

விதுரர் எனக்கு எவ்வளவோ எடுத்துரைத்தார். அவற்றையெல்லாம் கேளாததால் இன்று இந்த நிலைக்கு ஆளானேன். தருமா...நீ வருந்தாதே. நீயும் உன் தம்பிகளும்நாட்டாட்சியை மேற்கொண்டு நன்மை புரிவீராக" என்றார். ஆனால் தருமர் பதில் ஏதும் உரைக்காது மௌனமாய் இருந்தார்.

அடுத்து, வியாசர் தருமரை நோக்கி, "தருமா... நீ துயர் கொள்ளாதே..நீ எல்லா ராஜதருமங்களையும் ஆபத்தருமங்களையும் மோட்ச தருமங்களையும் பீஷ்மரிடம் கேட்டிருக்கிறாய். அப்படியிருந்தும் நீ ஏன் மதி மயக்கம் கொண்டாய்.

நீ பாவம் செய்தவனாக நினைத்தால் அந்தப் பாவத்தைப் போக்கும் வழியைக் கூறுகிறேன்..கேள்..நீ தசர குமாரனான ராமனைப்போல அஸ்வமேத யாகம் செய். உனது பாவங்கள் தொலையும்" என்றார்.

வியாசரின் ஆலோசனைப்படி கோலாகலமாகத் தொடங்கப்பட்ட அஸ்வமேதயாகத்தில் பலநாட்டு மன்னர்கள் கலந்து கொண்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் பல பொருள்களைஅரசகாணிக்கையாகக் கொண்டு வந்தனர்.அனைவருக்கும் அறுசுவை விருந்து பரிமாறப் பட்டது.

புலவர்கள், அறிஞர்கள், தர்க்க வாதம் புரிந்து அவையோரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினர்.

யாகம் முடிந்ததும் பொன்னிறமாக இருந்த ஒரு கீரி அங்கு வந்து தருமர் செய்த அந்த யாகத்தைவிட ஒரு பிடி மாவின் தானம் மேன்மையுடையது! என்று கூறி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளையும் நம்மால் முடியும் என்ற நம்பிக்கையுடன் அடி எடுத்து வைப்போம். இன்று செயற்பட்டால்தான் நாளையும் நம்மால் நம்பிக்கையுடன் சிந்திக்க முடியும். தொடர்ந்து செயற்படவும் முடியும். *– சார்லஸ் டிகால்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# மாடு வளர்ப்பு முயற்சியை ஊக்குவிக்க முடியாதோ?

இன்று பட்டிப்பொங்கல். விவசாய வேளாண்மைக்கு உறுதுணையாக இருந்த கதிரவனுக்கு நன்றி பாராட்டி பொங்கிப் படைத்த தமிழன், தன் விவசாயத் தோழனான மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு பட்டிப்பொங்கல் பண்பாட்டை உருவாக்கினான்.

ஆம், இன்றைய நவீன தொழிநுட்பக் கலாசாரம் கண்டறியப்படுவதற்கு முன்னதாக, எருதுகளில் ஏர் பூட்டி நிலத்தை உழுது பண்படுத்தி உலகை வாழ வைக்கும் உன்னதமான வேளாண்மைத் தொழில் நடந்தாயின.

இப்போதெல்லாம் செயற்கை இரசாயன உரங்களைப் பயன்படுத்தி நிலத்தையும் நீரையும் பாழாக்கி இரசாயனச் சேர்க்கை கொண்ட உணவுகளையும் உற்பத்தி செய்து, அதனூடு மனித உயிர்களைக் காவு கொள்ளத்தக்க நோய்களைத் தேடிக் கொண்ட காலம் இதுவாயிற்று.

ஆனால், அன்று பட்டியடைத்து எருப் பசளையிட்டு செய்த வேளாண்மை ஆயுளை, ஆரோக்கியத்தை, மகிழ்வை, மனத்திருப்தியை மனித குலத்திற்குத் தந்தன.

கால மாற்றம் படுகுழி நோக்கிச் செல்கின்றது என்று நாம் முணுமுணுத்தாலும் அதனைத் தடுத்து நிறுத்துவது யாரென்பது தான் இன்றைய பிரதான கேள்வி.

ஆம், பட்டி வளர்த்த பண்பாடு நாகரிக மோகத்தில் அடிபட்டுப் போயிற்று. மாடு என்றால் செல்வம் என்று பொருள்படுத்தி நின்ற நம் தமிழினம், மாடு வளர்ப்பதைத் தவிர்த்து செல்வத்தை இழந்து நிற்கிறது.

இந்த அவலம் பற்றி யாரும் எண்ணிப் பார்ப்பதாக இல்லை.

அண்டை நாடான இந்தியாவில் மாடு வளர்ப்பு மிகப்பெரும் தொழில் முயற்சியாக, செல்வம் ஈட்டும் பெரும் முதலீடாக வியாபித்துள்ளது.

இந்திய தேசத்து அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் மாடு வளர்ப்பதைப் பெருமெடுப்பில் செய்கின்றனர் எனும்போது, மாடு வளர்ப்பு இந்தியாவில் எவ்வளவு உயர்வு பெற்றிருக்கிறதென்பதை நாம் உணர முடியும்.

எனவே இன்றைய பட்டிப் பொங்கல் திருநாளில், எங்கள் தமிழர் தாயகத்தில் மாடு வளர்க்கும் முயற்சிகளை முடுக்கிவிடுகின்ற திட்டங்கள் பற்றி சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.

பசும்பால் உற்பத்தியில் உயர்வு பெற்றிருக்கக்கூடிய உலக நாடுகளில், இடம்பெறக்கூடிய நவீன தொழில்நுட்ப முறையிலான மாடு வளர்ப்பு முறைமைகளை இங்கும் அறிமுகப்படுத்தி, போதிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி மாடு வளர்ப்பு முயற்சிகளை முன்னெடுக்கும்போது எம் மக்களுக்கான பசும்பால் தேவை நிறைவு செய்யப்படுவதுடன் முயற்சியாளர்கள் உச்சமான வருமானத்தையும் ஈட்டமுடியும்.

எனவே புட்டிப் பாலுக்காகக் காத்திருப்பதை விடுத்து பசு வளர்ப்பு முயற்சிகளை ஊக்குவிப்பதே பொருத்தமான காரியமாகும்.

இது விடயத்தில் வடக்கு மாகாண நிர்வாகம் பொருத்தமான திட்டங்களை வகுத்து, பொருத்தமான இடங்களில் பொருத்தமானவர்கள் மூலமாக மாடு வளர்ப்புத் திட்டத்தை மேற்கொண்டால் எம் மக்களின் பொருளாதாரம் உயர்வடைவதுடன் மாட்டுத் தீவன தொழிற்சாலைகளும் அதனூடு உற்பவம் பெறும்.

## மலையக, முஸ்லிம் கட்சிகள் விலகியபின்

# பாரத பிரதமருக்கான கடிதத்தில் விட்டுக்கொடுப்பு தேவையில்லை

## எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

(கரணவாய்)

மலையக, முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளுக்கு மதிப்பு கொடுக்கும் வகையில் பாரதப் பிரதமருக்கான கடிதத்தில் சில விட்டுக்கொடுப்பு செய்யப்பட்டிருந்தது. எனினும் மலையக, முஸ்லிம் கட்சிகள் மோடிக்கான கடிதத்தில்கையொப்பம் இடாததால் அதற்கான விட்டுக்கொடுப்பு தற்போது தேவையில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தைப் பொங்கல் விழா நேற்று வெள்ளிக்கிழமை காலை வடமராட்சியில் உள்ள தமிழரசுக் கட்சியின் வடமராட்சி கிளை அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதன்பின் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியத் தூதுவருக்கு கையளிக்கப்பட இருந்த கடிதம் மலையக முஸ்லிம் கட்சிகளும் சேர்ந்துதான் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருந்தது. இலங்கை தமிழரசுக் கட்சி இந்த வேலைத் திட்டத்திற்கு வந்ததன் பிறகு ஒற்றுமையை எப்படியாவது பேண வேண்டும் என்ற நோக்கிலே நாங்களும் இணங்கி, இணைந்து செயற்பட்டோம். அப்படியான பொது கடிதத்தை தயாரிக்கின்றபோது அந்த இரண்டு மக்கள் கூட்டங்களின் அரசியல் அபிலாசைகளுக்கு மத்தியில் மதிப்பு கொடுக்கும் வண்ணமாக கடிதத்தில் இருந்து ஒரு சில விடயங்கள் நீக்கப்பட்டுத்தான் ஒரு ஒற்றுமை நிலைமை் கடந்த 21 ஆம் திகதி மாலை ஐந்து முப்பது மணி வரை எட்டப்பட்டு இருந்தது.

ஆனால் தற்போது முஸ்லிம் மற்றும் மலையக கட்சிகள் தாங்கள் கையொப்பம் இடவில்லை என விலகிய பிறகு அப்படியான விட்டுக்கொடுப்புக்கள் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது.

அதனாலே மிக முக்கியமாக வடக்கு,கிழக்கு தமிழ் மக்கள் தொடர்ச்சியாக கொடுத்து வருகின்ற மக்கள் ஆணை எதுவென்று விவரிக்கின்ற பகுதி அங்கே இருக்கிறது. அது மீண்டும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஏனெனில் தற்போது கைச்சாத்திடும் பிரதிநிதிகள் வடக்கு,கிழ்க்கை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள். இதனால் இறுதியிலும் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு கையளிக்கப்பட இருந்த கடிதம் 12 ஆம் திகதி கொடுப்பதாக இருந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக 10 ஆம் திகதியன்று இந்திய தூதுவர் நாட்டை விட்டு வெளியேறியிருந்தார் என்றார். (ம-60)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை ஞாயிற்றுக்கிழமை 16 ஆம் திகதி காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கைதடி மாகாணசபை, கைதடி சித்தமருத்துவம், நுணாவில் யுனைற்றட் மோட்டார்ஸ், கைதடி, நாராயணா வன்பொருள், அறுகு வெளி நாவற் குழி அரசு உணவு களஞ்சியம், நாவற்குழி, கைதடி, நவபுரம், கைதடிபனை ஆராய்ச்சி நிறுவனம், கைதடி மானிப்பாய் வீதி கோப்பாய் வரை, கோகிலாக் கண்டி மங்களா பட்டறை, கோகிலா கண்டித் துறை, மட்டுவில், நாவற்குழி லிங்கூஷ் ரெடிமிக்ஸ், மறவன்புலவு, முதியோர் இல்லத்தடி கைதடி - A-9 வீதி, நாவற்குழி சங்கன் கட்டுமானம், தச்சந்தோப்பு கேரைதீவு வீதி, தனங்கிளப்பு, செல்வ மஹால் திருமண மண்டபம், கொக்குவில் சந்தி, பூநாறி சந்தி, சிவப்பபிரகாசம் வீதி, மருத்துவ பீட அரங்கம், பொக்ஸ்லெஸ்ட் (பிறைவேட்) லிமிடெட் மருத்துவபீடம், அச்சுகூடம், ஞானபண்டிதா பாடசாலை, கொக்குவில், மாவடி திருநெல்வேலி, நந்தாவில், பிரம்படி, சைலோ கோயில் வீதி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** கூமரசங்குளம்மாதா கோவிலடி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வவுனியாவில் காஸ் அடுப்பு பற்றி எரிந்தது

(வவுனியா)

வவுனியா குடியிருப்பு பகுதியில் வீடு ஒன்றில் சமைத்துக் கொண்டு இருந்தபோது திடீரென காஸ் அடுப்பு பற்றி எரிந்துள்ளது.

வவுனியா, குடியிருப்பு வீதியில் உள்ள வீடு ஒன்றில் பெண் ஒருவர் சமைத்துக் கொண்டிருந்த போது நேற்று முற்பகல் திடீரென காஸ் அடுப்பின் கீழ்பகுதி பற்றி எரிந்துள்ளது.

இதனையடுத்து வீட்டார் காஸ் சிலிண்டரை பாதுகாப்பாக அகற்றிமேலதிக அனர்த்தம் ஏற்படுவதை தடுத்துள்ளனர்.

அத்துடன் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (ம-250)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## மன உறுதியுடன் இருங்கள்

• ஒவ்வொரு மனித இதயத்தின் உள்ளும் மிக ஆழத்தில் ஆதிஅந்தமில்லாத இறைவன் ஒளிந்து கொண்டிருக்கின்றான். அவனை உணர்ந்தவனே உண்மையை உணர்ந்தவன் ஆவான்.

• தன்னுடைய பலவீனங்கள், குற்றங்கள், பாவங்கள் எல்லாவற்றையும் வேறொருவரின் மேல் சுமத்துவது மனித இயல்பாக இருக்கிறது. நம்முடைய தவறுகளை உணர மறுப்பது தான் இதற்குக் காரணம்.

• எத்தனை நல்ல நூல்களை வாசித்தாலும் நம்மால் தூயவராக முடியாது. உண்மையை நாம் உணர வேண்டுமானால், தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது மெய்யுணர்வு நம்முள் மலரத் தொடங்கும்.

• உங்களுக்குப் பிடித்ததை கடைபிடிப்பதுபோல, மற்றவர்களும் அவரவருக்கு விருப்பமானவற்றை பின்பற்றும் சுதந்திரத்தைக் கொடுங்கள். ஏனென்றால், சுதந்திரம் இல்லாத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை.

• ... பாருங்கள். கொண்ட கொள்கை மற்றும் குறிக்கோளில் ... இருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

**53**

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



## தமிழ் எண்கள்
(புதிய முறை)

o - 0, க- 1, உ- 2,
ந- 3, ச- 4, ரு- 5,
சூ- 6, எ- 7, அ- 8,
கூ- 9

உதாரணம் கo -10
கக -11

**எண்களைத் தமிழ் முறைப் படி எழுதும் முறையில் பழங் காலத்தில் பூச்சியம் பயன்படுத் தும் வழக்கம் இல்லாமல் இருந் தது. 1825 ஆம் ஆண்டிலி ருந்து பூச்சியம் பயன்படுத்தும் முறை நடைமுறையில் வந்த தாக தகவல்கள் சொல்லுகின் றன. அதன்பின் ஆயிரத்தைக் குறிக்கும் ௲ என்பதும் நூறைக் குறிக்கும் ௱ என்பதும் பத்தைக் குறிக்கும் ௰ என்பதும் இல்லா தொழிந்தன.**

**"1,2,3 ... என்பன தமிழ் எண்களே அவை அரபு எண்கள் அல்ல" என்பது தமிழ்ப் பற்றா ளர்களின் வாதம். கிரேக்க நாகரித்தைப் போல பழம் பெரும் நாகரித்துக்குச் சொந் தக்காரர்களான தமிழர்கள் உலக நாடுகளுக்கு அளித்த கொடைதான் 1,2,3,4,5,6,7,8,9 என்னும் தமிழ் எண்கள் என்று கூறுகிறார்கள். இது ஆரா ய்ச்சி மூலம் நிருபிக்கப்பட்டால் அது எமக்குப் பெருமையே!**

**உலகின் பல மொழிகளுக்கு சொந்தமாக எண்கள் எது வுமே இருந்ததில்லை. ஆனால் ஆதி காலம் முதல் தமிழ் மக்களிடையே எண்கள், கணி தம், கால-நேர அளவைகள் பற்றி தெளிவான அறிவு நிரம் பியிருந்தது. கணியன் பூங்கு ன்றனார், கணக்காயன் தத்த னார், மதுரைக்கணக்காயனார், கணியாதனார் என்ற சங்க கால புலவர்களின் பெயர்களே இவற் றுக்கு சாட்சி எனலாம்.**


**1,2,3... என்பன தமிழ் எண் களே அவை அரபு எண்கள் அல்ல.**

"1.2.3...என்பன தமிழ் எண் களே அவை அரபு எண்கள் அல்ல" என்பது தமிழ்ப் பற்றாளர்களின் வாதம். கிரேக்க நாகரித்தை போல பழம் பெரும் நாகரித்துக்குச் சொந் தக்காரர்களான தமிழர்கள் உலக நாடுகளுக்கு அளித்த கொடைதான் 1.2.3.4.5.6.7.8.9 என்னும் தமிழ் எண்கள் என்று கூறுகிறார்கள். அதனைப் படம் (அ) வினூடாக விள க்கமளிக்கிறார்கள்.

படம் (அ)வைப் பாருங்கள் "க" என்னும் குறியீட்டுக்குள் "1" இருப் பதைக் காணலாம். "உ" என்னும் குறியீட்டுக்குள் "2" இருப்பதைக் காணலாம். "ரு" என்னும் குறியீட் டுக்குள் "5" இருப்பதைக் காண லாம்.

இவ்வாறு 1,2,3,4,5,6,7,8, 9,10 என்பன எமது தமிழ் எண் களுக்குள் இருப்பதைக் காண லாம். இவை ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கப் பட்டால் அது எமக்குப் பெருமையே!

படம் (அ) தமிழ் எண்கள் க,உ .... என்பவற்றுள் 1,2 ..... எண்கள்




"எண்ணும் எழுத்தும் கண்ணெ னத் தகும்" என ஔவையாரும், "எண் என்ப ஏனை எழுத்தென்ப இரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு" என திருவள்ளுவரும் எண்களின் முக்கியத்துவத்தை தங்கள் பாடல்களில் குறித்துக் காட்டியுள்ளனர். உலகின் பல மொழி களுக்கு சொந்தமாக எண்கள் எது வுமே இருந்ததில்லை.

ஆரம்ப காலத்தில் பல மொழி பேசும் மக்கள் எண்களைப் பற்றி தெளிவான கருத்தேற்றம் கொண்ட வர்களாகவே வாழ்ந்து வந்தனர். இன்று உலகம் முழுவதும் பயன் பாட்டில் உள்ள இந்து அராபிய எண் களின் அறிமுகத்துக்குப் பின்னரே எண்கள் பற்றிய மிகத் தெளிவான வரையறைகள் வகுக்கப்பட்டன.

ஆதிகாலம் முதல் தமிழ் மக்க ளிடையே எண்கள், கணிதம், கால-நேர அளவைகள் பற்றி தெளிவான அறிவு நிரம்பியிருந்தது. சங்கநூல் களில் இந்த எண் அளவைகள் பற்றி பற்பல குறிப்புகள் காணப்படுகின் றன. கணியன் பூங்குன்றனார், கணக்காயன் தத்தனார், மதுரைக் கணக்காயனார்,

கணியாதனார் என்ற சங்ககால புலவர்களின் பெயர்களே இவற்றுக்கு சாட்சி எனலாம்.

தொல்காப்பியம் முதல் அக நானூறு, புறநானூறு என சங்க நூல்களில் எல்லாம் கணிதம் பற்றியும் எண்கள் பற்றியும் ஏராளமான சொற்கள் ஆங்காங்கு விரவிக்கிடக்கின்றன.

எண் என்பது எண்ணிக்கை. பொருட்களை முழு எண்களாகவும் பின்ன எண்களாகவும் மக்கள் எண்ணுகின்றனர். தொல்காப்பியர் முழு எண்களை எண்ணும் சொற் களைக் குறிப்பிடுகிறார். அவை ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினா யிரம், நூறாயிரம் எனப் பத்தின் மடங்குகளாக உள்ளன.

**திருக்குறளில் 954 ஆம் குறள்**

**"அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர்"**

திருக்குறளில் 954 ஆம் குறளில், கோடி என்னும் எண் குறிப்பிடப்படு கிறது. கோடி என்னும் சொல் கடைசி எல்லையைக் குறிக்கும். கோடிக்கு மேல் உள்ள எண்களைத் தொல் காப்பியர் அல்பெயர் எண் என்று குறிப்பிடுகிறார். எண்ணிக்கை அளவைக் குறிப்பிடுவது எண். அளவு காட்டாமல் மிகுதியைக் குறிப் பிடும் எண்ணுப் பெயர்களும் (பல எண்கள் பழக்கத்தில் இருந்திருக் கின்றன. அவற்றை எண்ணால் குறிக்காமல் எழுத்தால் குறித்துள்ள னர்). தமிழில் இருந்தன. அவற் றைத்தான் தொல்காப்பியர் "அல்பெ யர் எண்" என்று குறிப்பிடுகிறார்.

"ஐ"யில் முடியும் தாமரை, "அம்" மில் முடியும் வெள்ளம், "அல்"லில் முடியும் ஆம்பல் ஆகிய எண்ணுப் பெயர்கள் அளவிட முடியாத பேரெ ண்களைக் குறிப்பவை என்பது தொல் காப்பியம் தரும் விளக்கம். சங்க இலக்கியமான பரிபாடலில் நெய்தல், சங்கம், கமலம் முதலிய பேரெண்கள் குறிக்கப்படுகின்றன. அட்டவணை-4 ஐப் பார்க்க. (உதாரணம் அற்புதம் = 10 கோடி = 100, 000,000).

**இவற்றை ஆங்கில உச்சரிப் பில் பார்ப்போமானால்**

கோடி -ten million,
அற்புதம் -hundred million,
நிகர்புதம் – one billion,
கும்பம் -ten billion,
கணம் -hundred billion,
கற்பம் -one trillion,
நிகற்பம் -ten trillion,
பதுமம் -hundred trillion,
சங்கம்-one quadrillion,
சமுத்திரம்-ten quadrillion,
ஆம்பல்-hundred quadrillion,
மத்தியம்–quintilli on,
பரார்த்தம்– ten quintillion,
பூரியம்– hundred quintillion
ஆகும்.

அட்டவணை-4 அல்பெயர் எண்கள்

| | | | |
|---|---|---|---|
| 10கோடி | 1அற்புதம் = $10^8$ | 10சங்கம் | 1சமுத்திரம் |
| 10அற்புதம் | 1நிகற்புதம் | 10சமுத்திரம் | 1ஆம்பல் (அந்நியம்) |
| 10நிகற்புதம் | 1கும்பம் | 10ஆம்பல் | 1மத்தியம் (அர்த்தம்) |
| 10கும்பம் | 1கணம் | 10மத்தியம் | 1பரார்த்தம் |
| 10கணம் | 1கற்பம் | 10பரார்த்தம் | 1பூரியம் |
| 10கற்பம் | 1நிகற்பம் | 10பூரியம் | 1 முக்கோடி (பிரமகற்பம்) |
| 10நிகற்பம் | 1பதுமம்(தாமரை) | | |
| 10பதுமம் | 1சங்கம் | 10 முக்கோடி | 1 மகாயுகம் = $10^{22}$ |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலேரியா...

பட்ட சாவகச்சேரி வடக்கு மீசாலைப் பகுதியில் நேற்று மலேரியா நோயாளர் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார்.

வெளிநாடு ஒன்றில் இருந்து கடந்த இரண்டாம் திகதி நாடு திரும்பிய 25 வயதான இளைஞனே இவ்வாறு சுகயீனம் காரணமாக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெறவந்த சமயம் மலேரியா நோய்த் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மலேரியாவால் இனங்காணப்பட்டவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-30)

## உழவு...

பெற்றுள்ளது.

இதில் புத்தூர் - கலைமதி பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னதம்பி தெய்வேந்திரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள அதேவேளை மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-18,33)

## மயங்கிவிழுந்த...

உயிரிழந்துள்ளார்.

மந்துவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த 09 வயதான ச.சான்சன் என்ற சிறுவனே இவ்வாறு மயங்கி விழுந்துள்ளார்.

சிறுவனை உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அழைத்து வந்தபோதிலும் சிறுவனது உயிர் ஏற்கெனவே பிரிந்து விட்டதாக வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். (ம -30)

## 16 பேர்...

மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,190 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## 3998 ரூபாவு...

நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (ம)

## சங்கானை...

குளத்தில் இருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாதகலைச் சேர்ந்த கடம்பன் (வயது- 38) என்பவரே இவ்வாறு சடலமாக மீடகப்பட்டுள்ளார். உள்ளூர் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து உரிமையாளரான அவர் மூன்று நாட்களாக காணாமற்போயிருந்தார் என்று இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அவரது சடலம் நேற்று பிற்பகல் சங்கானை மண்டிகைக் குளத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-18,33,104)

## பண்பாடுகள்...

சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

வைத்தியர் ஆர்.வீ. சசிகரனின் படைப்பில் உருவான "உனக்கும் உதிரம்தானே" குறும்பட இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் அமைந்துள்ள அறிவகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "இன்று சமூகத்தில் தலைதூக்கியுள்ள போதைப் பொருள் பாவனை மற்றும் விபத்துக்கள் என்பன மேலும் சமூகத்தில் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கின்றன.

எங்களுடைய சமுதாயம் படுகின்ற பல துன்ப நிலைகளையும் கடந்து இவ்வாறான கலை படைப்புக்கள் வெளிவருகின்றன.

தொடர்ந்தும் தடைகளையும் இடர்க்களையும் சந்திக்கின்றோம். அதிலும் போதைவஸ்துப் பாவனை என்ற பெரிய சவாலும் காணப்படுகின்றது. அதனை எவ்வாறு எதிர்கொள்வது, அதிலிருந்து இந்த இளம் சமூகத்தை எவ்வாறு காப்பது என்பது பற்றி சிந்திக்கக்கூடிய வகையிலே வைத்தியர் சசிதரனின் படைப்பு இன்று உருவாகி இருக்கின்றது.

இவ்வாறான படைப்புக்கள் இளம் சமூகத்திடம் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். பண்பாடுகள், கலைகளின் வெளிப்பாடுகள் ஊடமே நமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்ள முடியும்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம)

## மனித...

நல்லிணக்கத்தின் முன்னேற்றம் மற்றும் நாட்டின் சர்வதேச நியமங்களுக்கு அமைய மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்குமான நம்பகமான உள்நாட்டுக் கட்டமைப்பு உருவாக்கப்படும் என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஹங்கேரியின் அனுகுமுறையைப் பாராட்டிய அமைச்சர் பீரிஸ், நல்லிணக்கத்தின் முன்னேற்றம் மற்றும் நாட்டின் சர்வதேச நியமங்களுக்கு அமைய மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் உள்ள நம்பகமான உள்நாட்டுக் கட்டமைப்பு குறித்தும் ஹங்கேரிய அமைச்சருக்குத் தெரிவித்தார். (ம)

## தேவையற்ற...

மஹரகம பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய குணவர்தன, நாடு எதிர்நோக்கும் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு மக்களின் ஆதரவைப் பெற வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இலங்கை போன்ற எண்ணெய் உற்பத்தி அல்லாத எந்தவொரு நாடும் எரிபொருள் நெருக்கடியை சந்திக்க நேரிடும் எனவும், இது இலங்கைக்கு மாத்திரம் விசேடமான பிரச்சினையல்ல எனவும் சுட்டிக்காட்டிய அமைச்சர், எரிபொருள் பாவனையை முடிந்தவரை மட்டுப்படுத்துவதே சிறந்த தீர்வாகும் எனவும் தெரிவித்தார்.

இதன் மூலம் நாட்டிலிருந்து வெளியேறும் டொலர்களின் அளவைக் குறைக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். இயன்றவரை பயணத்தை குறைத்து, எப்போதும் இணையம் மூலம் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுமாறும் அமைச்சர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (ம)

## ராஜ...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஆட்சி ஏற்கனவே கவிழ்ந்து விட்டதாகவே கருதுகின்றேன். இன்று ஆட்சியாளர்கள் இருப்பதாக தெரியவில்லை, ஆனால் சொல்லி நாட்டை

மென்மேலும் ஒரு இருண்ட யுகத்துக்குள்ளே கொண்டு வருகிறவர்கள், தற்போதைய ஆட்சி அகற்றப்படவேண்டும் என்பதிலே மாற்றுக் கருத்து கிடையாது. தென்னிலங்கையிலே இதற்கான எதிர்ப்பு போராட்டங்கள் ஆரம்பமாகியிருக்கிறது.

மக்களாக இந்த போராட்டங்களை நடத்துகிறார்கள், அரசியல் தலைவர்கள் முன்வந்து இந்த மாற்றத்தை செய்வோம் என எதிர்பாரக்கின்றோம் என்றார். (ம -60)

## கருத்துப் பகிர்வு நிகழ்வு

(குப்பிழான்)

தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில் "இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணங்களும் விளைவுகளும்" எனும் தலைப்பிலான கருத்துப் பகிர்வு நிகழ்வு இன்று சனிக்கிழமை இரவு 07 மணியளவில் இணையவழியில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கொழும்பு பல்கலைக் கழக மூத்த பொருளியல்துறை விரிவுரையாளர் பேராசிரியர் கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் பிரதான கருத்துரை நிகழ்த்துவார். MEETING ID:5439713600 மூலம் ஆர்வலர்கள் இணைந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-18)

### மெகா பவர்

திகதி 14/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 0995
V 16 17 51 54 67

### சுபிரி வாசனா

சீட்டிழுப்பு திகதி 2022/01/14 · சீட்டிழுப்பு இலக்கம் 1667
10 · 26 40 56 61

### மஹஜன சம்பத

திகதி 2022/01/14
சீட்டிழுப்பு இலக்கம் 4647
L 7 6 6 1 2 8

### கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 14.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2942
Y 45 49 79 80

### தன நிதானய

திகதி - 2022.01.14
சீட்டிழுப்பு இலக்கம் - 677
G 24 29 33 60

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1684 · திகதி 2022.01.14
R 23 27 51 67

### அத கோடிபதி

சீட்டிழுப்பு இல: 1450 · சீட்டிழுப்பு திகதி: 14.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,259,240
03 13 66 73 E

### சனிதா

சீட்டிழுப்பு இல: 3785 · வர்ணம்: செம்மஞ்சள் · சீட்டிழுப்பு திகதி: 14.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,939,400
15 22 24 61 G

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1624 · நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 14.01.2022 · தினம் வெள்ளி
W 15 41 52 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் : 54,517,476/=

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 121 · சீட்டிழுப்பு திகதி 14.01.2022 · வெள்ளிக்கிழமை
06 38 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,850,860/-

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 3,847,292/=
திகதி 14.01.2022 · வெற்றி வாரம் 3336
10 21 29 35
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,795,040/=

### 12 வசனா

P 36 13 19 48 51
சீட்டிழுப்பு வாரம் 800 · திகதி 2022.01.14 · வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 204,075,667/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

**பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை**

தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9630)

**077 814 7389 | 077 614 7333**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் வீதியில் 16 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல சூழல்
- பலாலி றோட்டில் இருந்து 300m தூரத்தில்

(தரகர் தேவையில்லை) (9670)

**076 163 3176**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1 ஆம் வீதியில் 64 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நாவற்குழி சந்தியிலிருந்து 300m தூரம்
வீடமைப்பதற்கு நல்ல சூழல்
நிலப்பரப்பு ஒரு பரப்பின் விலை 5 இலட்சம். (9662)

**076 890 9259**
**077 015 0353**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடிப் பாதையுடன் 24 பரப்புக் காணி 1 1/2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

[ மேட்டுநிலம், நிலப்பரப்பு ]
நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோமீற்றர் தூரம்
ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (9634)

தொடர்பு
**077 911 6983, 077 658 5999**
**077 288 0152, 077 623 4204**

## வேலை வாய்ப்பு

எமது பண்ணைகள் புதிதாக பல மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படுகின்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ். மாவட்டங்களில்.

**விண்ணப்பிக்கக் கூடியவர்கள்:**

- O/L வரை படித்தவர்கள்.
- அரச வேலையில் ஓய்வுபெற்ற அதிகாரிகள், ஆசிரியர்கள்.
- விவசாய, கால்நடை ஆர்வம்.அனுபவம் மிக அவசியம்.

**சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.**

## குத்தகைக்கு அல்லது விலைக்கு வேண்டும்

நெல் வயல் காணிகள், தென்னங்காணிகள், தோட்டக்காணிகள், பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள் செய்ய உகந்த காணிகள்.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார், யாழ். மாவட்டங்களில்.

தொடர்பு (9635)
**+9477 795 0439 / +94 (71) 703 0547**
**0041 79 3344733**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் கடை ஒன்றுக்கு காசாளர் தேவை.(பெண்)

தொடர்பு (C-3546)
**076 192 3444**

## சேல்ஸ்மன் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்திற்கு புடைவை வியாபாரம் அனுபவமுள்ள ஆண்கள் தேவை. பழக விரும்புபவர்களும் சேரலாம். (9669)

**சென்னை பெசன் வேல்ட்**
இல. 63, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9671)

**076 825 7716 (ஆகாஸ்)**

## வடஇந்திய காசி யாத்திரை

**ஆரம்பம் : 20.04.2022** | **நாட்கள் : 16**

காசி, கயா, அலகாபாத், டெல்லி, ஆக்ரா, மதுரா, இராமேஸ்வரம், சீரடி பாபா, மும்பாய், கொல்லிமலை, சித்தர் பூமி.

- *விபரங்களைக் கேட்டு அறிந்து பதிவுசெய்க.*
- *10 பேர் மட்டும்.*

**T. ஸ்ரீரெங்கநாதன்**
T.P. 077 768 0102, 077 693 9716 (C-3538)

நீண்ட நாட்களின் பின் ஆரம்பமாகின்றது.
உங்களின் ஆதரவை நாடுகின்றேன்.

அமரர் **வே. அன்பழகன்** அவர்களின்
**அன்பொளி** கல்வியகத்தின்
**தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சை - 2022**
இற்கான வகுப்புக்கள்

*நாளை (16.01.2022 - ஞாயிற்றுக்கிழமை)*
*பி.ப. 3.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.*

ஆசிரியர் - பிரபல புலமை ஆசான்
## திரு.ப.பத்மநேசன்

"சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்"

(9667) **- இயக்குநர்**

" INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"
## TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி

**A/L தொழில்நுட்பப் பிரிவு**

**விசேட செயலமர்வு – 2021**

**17,18,21,22 AND 23 JANUARY- 2022**

| பாடம் | ஆசிரியர்கள் |
|---|---|
| தகவல் தொடர்பாடல் | உமாகாந்தன் (BIT) |
| தொழில்நுட்பவியல் | நஜன் (B.sc) |
| விவசாய விஞ்ஞானம் | சாரங்கன் (B.sc in Agri.)<br>திருக்குமரன் (B.sc in Agri.)<br>நிரோஜன் (B.sc) |
| ஊடகக்கற்கை | N.கஜிதரன் (B.A) |
| கணிதம் | மோகன்ராஜ் (B.sc) |

காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை
(அனைத்து மாணவர்களும் பங்குபெறலாம்.)

**இடம் : வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.** (C-3541)

தொடர்புகளுக்கு : **077 017 5346**

## ஊர்க்கோழி குஞ்சுகள்

1 நாள் குஞ்சு - 85/=
1 மாத குஞ்சு - 300/=
1 நாள் வான்கோழி குஞ்சு - 300/= (9415)

**077 332 2433**
**Rani Farm Pannagam**

## கூலர் விற்பனைக்கு

மரக்கறி, பழங்கள் விற்பனைக்கு உகந்த பெரிய கூலர் உடன் விற்பனைக்கு உண்டு. (9657)

**077 922 9333**

## சிறுநீரகம் தேவை

43 வயதுடைய பெண் ஒருவருக்கு O+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்பு (9664)
**076 680 8025**

## வெளிநாட்டு கற்கைநெறிகள் வேலைவாய்ப்புக்கள்

கனடா / UK / சிங்கப்பூர் / மலேசியா ஆகிய நாடுகளில் CARE GIVER (முதியோர் - சிறுவர் - நோயாளர் பராமரிப்பு) COOK / HOTEL MANAGEMENT துறைகளில் வேலை வாய்ப்புக்களும் அதற்கான கற்கை நெறிகளும் (C-3492)

ஆரம்பம் - 15-01-2022 / உடனடி அனுமதிகள்



IELTS Life Skills B1
வெளிநாடு செல்வதற்கான ஆங்கிலம் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
**0777-068-777** R1

## விரைவு பொதிகள் சேவை

## V2 TRAVELS

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

(C-3491)

**0768226240** DHL

## கணக்காளர் தேவை

பண்ணை, தங்கும் விடுதி, உணவகம் என்பனவற்றிற்கு கணக்குகள் பார்க்கக் கூடியவர்கள். அனுபவத்திற்கு முன்னுரிமை.
இடம் : சண்டிலிப்பாய் (C-3533)

**077 078 0240**
**071 078 0240**

## GROUP CLASS

O/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு துரிதமீட்டல் வகுப்பு

வரலாறு, புவியியல், குடியியல், சைவசமயம், கணிதம்
**Zoom / நேரடி வகுப்பு**

**தரம் 3 - 5 மாணவர்களுக்கு**
சுற்றாடல், கணிதம், தமிழ்
**Zoom / நேரடி வகுப்பு**

A/L 2022 / 2023 மாணவர்களுக்கு
அரசியல், வரலாறு, இந்துசமயம், இந்து நாகரிகம் (9619)
**Zoom / நேரடி வகுப்பு**

அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும்.

**076 977 9392**
**076 645 9287**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.